REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
தினகரன்

2022 ஏப்ரல் 11 திங்கட்கிழமை

வருட. 90 இல. 86 | Monday 11, April, 2022 | 16பக்கங்கள் | 30/-

## 2 வருடங்களின் பின் ஆசிரியர் இடமாற்றங்கள்

### கல்வியமைச்சினால் மீண்டும் ஆரம்பம்



இரண்டு ஆண்டு கால இடைவெளிக்கு பின்னர் ஆசிரியர் இடமாற்றங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. 06

## எரிபொருள், மருந்து, Gas, அத்தியாவசிய பொருட்கள் கொள்வனவுக்கு;

# 6 மாத காலத்திற்கு 3 பில். டொலர் வெளிநாட்டு உதவி பெற நடவடிக்கை



### IMF மற்றும் நட்பு நாடுகளிடம் பேச்சு நடத்தி நிதி பெற ஏற்பாடு

**நெருக்கடி நிலையை சீராக்கும் திட்டம் குறித்து நிதியமைச்சர் அலிசப்ரி வெளிப்படுத்தல்**

(ஷம்ஸ் பாஹிம்)

எரிபொருள், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தை வழமைக்கு கொண்டுவருவதற்காக அடுத்த ஆறு மாதங்களில் இலங்கைக்கு சுமார் 3 பில்லியன் டொலர் வெளிநாட்டு உதவி தேவைப்படும் என நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இதனை பெறுவது ஒரு கடினமான பணி என்ற போதும் அரசாங்கம் அனைத்து முன்னெடுப்புகளையும் மேற்கொண்டு நாட்டை வழமை நிலைக்கு திருப்ப பிரயத்தனம் எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த மாதம் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) இலங்கை நடத்த உள்ள பேச்சுவார்த்தையின் போது 3 பில்லியன் டொலர் நிதியை பெற தேவையான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர், நாடு சர்வதேச பிணைமுறி மற்றும் செலுத்த வேண்டிய கடன்களை மீளமைக்க திட்டமிடப்பட்டுள்ளதோடு ஜுலை மாதத்தில் செலுத்த வேண்டிய ஒரு 06

## 'எமக்கு ஜனாதிபதி கோட்டா வேண்டும்'

## நாட்டின் பல பாகங்களிலும் அரசுக்கு ஆதரவாக பேரணிகள்



### வடக்கு, கிழக்கு, கண்டி, தங்காலை உட்பட பல பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவித்து நேற்று வடக்கு, கிழக்கு, கண்டி , தங்காலை உட்பட பல பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இதில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். 'எமக்கு ஜனாதிபதி கோட்டா வேண்டும், 69 இலட்சம் மக்கள் கோட்டாபயவுடன் உள்ளனர், 'சஜித், அநுரவால் முடியாது போன்ற கோசம் எழுப்பியவாறு பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காலை 10 மணியளவில் ஆரம்பமான ஆர்ப்பாட்டத்தில் ஆண்கள்,பெண்கள்,மத தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டார்கள். 06

## ஆர்ப்பாட்டங்கள் அரசுக்கோ ஆளுங்கட்சிக்கோ எதிரானதல்ல!

### ஒட்டுமொத்த அரசியல் கட்டமைப்புக்கானது – ஜீ.எல்



பொது மக்களால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டங்கள் நேரடியாக அரசாங்கத்துக்கோ, தனியொரு அரசியல் கட்சிக்கோ, ஆளுங்கட்சிக்கோ எதிரானது அல்ல.

நாட்டில் நடைமுறையிலுள்ள ஒட்டுமொத்த அரசியல் கட்டமைப்புக்கும் எதிராகவே அவர்கள் போராடுகின்றார்கள் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு பொருளாதார நெருக்கடிக்கு மாத்திரமன்றி, அரசியல் நெருக்கடிக்கும் முகங்கொடுத்திருக்கிறது. இவ்வாறானதொரு பின்னணியில் 06

## மத்திய வங்கியின் செயற்பாடுகளில் அரசியல் தலையீடு ஆபத்தானது

### முழு நாட்டுக்குமே எதிர்வினையாக அமையும்



நாடொன்றில் மத்திய வங்கி நீதிமன்றத்தை போன்று சுயாதீனமாக செயற்பட வேண்டும் .மத்திய வங்கியின் செயற்பாடுகளில் அரசியல் தலையீடு காணப்பட்டால் அது முழு நாட்டுக்கும் எதிர்வினையை தோற்றுவிக்கும்.

2009ஆம் ஆண்டு காலத்தில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைவதை தவிர்ப்பதற்கு மத்திய வங்கி சுயாதீனமாக செயற்பட்டது. தற்போதைய நிலைமையில் பொருளாதார மீட்சிக்காக மத்திய வங்கியும், 06

## நம்பிக்கையில்லாப் பிரேரணை; எதிர்கொள்ள அரசாங்கம் தயார்!

### நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வதற்கு தயார் என்று ஆளும் தரப்பு அறிவித்துள்ளது.

ஆளும் தரப்பின் தற்காலிக அமைச்சரவையில் நிதி அமைச்சராக பதவிவகிக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். 06

## அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து SLFP ஆராய்வு

### கட்சி எம்.பிக்களுடன் கலந்தாலோசனை



தற்போதைய நிலைமைக்கு மத்தியில், எடுக்கவேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து, பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. 06

## தேவையான எரிபொருள் இறக்குமதிக்கு ஏற்பாடு

### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்



இந்த மாதத்திற்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்காக, 700 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார். 06

## கடும் மழையுடன் கூடிய காலநிலை 14 வரை நீடிக்கும்

### நாட்டின் பல பகுதிகளில் 100 மி.மீ மழை



இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் உருவாகியுள்ள கீழ் வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக, தற்போது நிலவும் மழையுடனான வானிலை 14 ஆம் திகதிவரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது . நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மழையோ அல்லது 06

## நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி; பாக்.பிரதமர் இம்ரான் பதவி இழந்தார்

### புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் தெரிவாகும் வாய்ப்பு



நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோல்வியடைந்ததில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தனது பதவியை இழந்துள்ளார். நள்ளிரவு நடைபெற்ற வாக்கெடுப்பில் அவருக்கு எதிராக 174 வாக்குகள் அளிக்கப்பட்டன. இதனால் பெரும்பான்மையை இழந்த பாகிஸ்தான் பிரதமர் பதவியில் இருந்து அகற்றப்பட்டுள்ளார். கடந்த மார்ச் 28ம் திகதி பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக அந்நாட்டின் 06

## நிதியமைச்சர் சப்ரி தலைமையில் பிரதிநிதிகள் குழு அமெரிக்கா பயணம்



இலங்கை பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் 18 ஆம் திகதி அமெரிக்காவின் வொசிங்டன் நோக்கி பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்காக குறித்த குழுவினர் பயணமாகவுள்ளனர்.

இந்த பேச்சுவார்த்தை 5 நாட்களுக்கு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுனர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் கே. எம். எம் சிறிவர்தன ஆகியோரே இவ்வாறு பயணமாகவுள்ளனர்.

## தமிழருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் உதவவும்



ஸ்டாலினிடம் TNA கோரிக்கை 03

## நிறைவேற்று அதிகார முறைமை; 6 தமிழ் கட்சிகள் வலியுறுத்து

மாவை, விக்கி, செல்வம், சித்தா, சுரேஷ், ஸ்ரீகாந்தா கடிதம் 03

## இன்றும் நாளையும் அரசாங்க விடுமுறை



அத்தியாவசிய சேவைகள் இயங்கும் 03

## நோன்பு நேரங்கள்



ஸஹர் முடிவு: 04.36
நோன்பு துறக்கும் நேரம்: 06.19

## இலங்கையர் 19 பேர் தமிழகத்தில் தஞ்சம்


### தனுஷ்கோடிக்கு கப்பலில் சென்றடைவு



இலங்கையில் இருந்து தனுஷ்கோடிக்கு மேலும் 19 பேர் அகதிகளாக வந்துள்ளதாக தனுஷ்கோடி பொலிஸார் தெரிவித்துள்ளனர். தனுஷ்கோடி அருகே அரிச்சல்முனை கடற்கரைப்பகுதியில் புகலிடம் கோரி வந்த 19 பேரை பொலிஸார் தமது பொறுப்பில் எடுத்துள்ளதாகவும் 06

## நாட்டை விட்டு நான் ஒருபோதும் ஓடமாட்டேன்

### மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் கப்ரால்



நான் நாட்டை விட்டு வெளியேறமாட்டேன். அனைத்து குற்றச்சாட்டுகளையும் எதிர்கொள்வேன் என அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். கப்ரால் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என வதந்திகள் வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். ஏனைய ஆளுநர்களை போல நான் நாட்டை விட்டு ஓடமாட்டேன் என அவர் தெரிவித்துள்ளார். 06

## ரணில் பிரதமராக மைத்திரி ஆதரவு

### சுரேன் ராகவன் MP தெரிவிப்பு




ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்படுவாரானால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்கு ஆதரவளிப்பார் என அந்தக் கட்சியின் உப செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

## மலையகத்தில் தொடர் மழையால்

## 06 நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

ஹற்றன் விசேட நிருபர்



கடந்த சில தினங்களாக பெய்த மழையைத் தொடர்ந்து முக்கிய நீர்த்தேக்கங்கள் பலவற்றில் நீர் மட்டம் 66 வீதமாக உயர்ந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. நீர்த்தேக்கங்களின் நீர் முகாமைத்துவ பிரிவின் 06

## விக்கல் வீராச்சாமி



சூரியன் தம்பி பதவியில இருகேக்க்க பேஸ்புக்ல எந்த ஒரு மொக்க பதிவ போட்டாலும் உடன லைக்குகள் கமெண்டுகள் ஆயிரத்தைத் தாண்டி ஓடும்....

புரியுது, அந்தத் தம்பி கோல் ஃபேஸில நிண்டு போட்ட படத்துக்கு ஒரு நாள் ஆகியும் நூறு லைக்குகள் கிடைக்கவில்லை எண்டு சொல்ல வாறீங்க அதுதானே...!!!

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## பிரான்ஸ் தேர்தலில் மக்கள் வாக்களிப்பு

பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலின் வாக்குப் பதிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன் மற்றும் தீவிர வலதுசாரி மரீன் லே பென் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

நற்பத்து ஒன்பது மில்லியன் மக்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த நிலையில் 12 வேட்பாளர்களிடையே இரண்டாவது சுற்று வாக்கெடுப்புக்கான இரு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.




உக்ரைனில் ரஷ்யாவின் போர் தொடர்பில் அவதானம் செலுத்தி இருக்கும் ஜனாதிபதி, தேர்தல் பிரசாரத்தில் குறைந்த நேரத்தையே செலவிட்டு வந்தார். இந்நிலையில் குடியேறிகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிரானவரான லே பென் மெக்ரோனுக்கு கடும் சவாலாக உள்ளார்.

முதல் சுற்று தேர்தலில் யாருக்கும் 50 வீதத்துக்கும் மேலான வாக்குகள் கிடைக்கவில்லையென்றால், முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் வேட்பாளர்களுக்கு இடையே வரும் 24 ஆம் திகதி இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெறும். அதில் வெற்றி பெறுபவர் நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக பெறுப்பேற்பார்.

இந்தத் தேர்தலைத் தொடர்ந்து, பிரான்ஸ் பாராளுமன்றத்துக்கான தேர்தல் வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## பிரிட்டன் பிரதமர் ஜோன்சன் உக்ரைனுக்கு திடீர் பயணம்

பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் உக்ரைன் ஜனாதிபதி செலென்ஸ்கியை சந்தித்துள்ளார். உக்ரைன் போர் ஆரம்பித்த பின்னர் ஜி7 நாடுகளைச் சேர்ந்த தலைவர் ஒருவர் உக்ரைன் நாட்டிற்குச் செல்வது இதுவே முதல்முறை.

பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் உக்ரைன் பயணம் தொடர்பான தகவல்கள் அனைத்துமே ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.



இது தொடர்பாக பிரிட்டன் செய்தித்தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், "உக்ரைன் மக்களுடன் நாங்கள் என்றும் இருப்போம் என்பதை வெளிப்படுத்தும் வகையில், உக்ரைன் ஜனாதிபதி செலென்ஸ்கியை நேரில் சந்திக்கப் பிரதமர் உக்ரைனுக்குச் சென்றுள்ளார்" என்றார்.

உக்ரைன் நாட்டில் இப்போது இருக்கும் நிலைமை குறித்து இருவரும் தனியாக ஆலோசனை நடத்தினர். பின்னர், கியேவ் வீதிகள் வழியாக இருவரும் நடந்து சென்றனர். அங்கு இருந்து மக்களுடன் பொரிஸ் ஜோன்சன் கலந்துரையாடினார்.

"உக்ரைன் ஜனாதிபதி செலென்ஸ்கியின் உறுதியான தலைமை மற்றும் உக்ரைனிய மக்களின் வீரம் மற்றும் தைரியத்திற்குத் தலை வணங்குகிறேன்" என்று ஜோன்சன் குறிப்பிட்டார்.

### பதவி நீக்கப்பட்டார் இம்ரான் கான்

# பாகிஸ்தானின் புதிய பிரதமரை தேர்வு செய்யும் வாக்கு இன்று


பாகிஸ்தான் பிரதமர் பதவியில் இருந்து இம்ரான் கான் நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் நீக்கப்பட்ட நிலையில் பாகிஸ்தான் பாராளுமன்றம் இன்று திங்கட்கிழமை கூடி, புதிய பிரதமரை தேர்வு செய்வதற்காக வாக்கெடுப்பை நடத்தவுள்ளது.

இந்நிலையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் அளுங்கட்சியைச் சேர்ந்த சபாநாயகர்கள் இல்லாத நிலையில், பிரதமர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்பு மனுக்களை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11க்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று சட்டசபை கூட்டத்திற்கு தலைமை தாங்கிய அயாஸ் சாதிக் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலையில் இடம்பெற்ற நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் தோல்வி அடைந்த நிலையிலேயே இம்ரான் கான் தனது பதவியை இழந்துள்ளார். 69 வயதான கானின் கூட்டணி கட்சிகள் கைவிட்ட நிலையிலேயே அவர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்தார்.

நாட்டின் பொருளாதார சீர்கேடு மற்றும் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதாக இம்ரான் கான் மீது குற்றம்சாட்டப்படுகிறது.

இதன்போது பெரும் இழுபறிகளுக்கு மத்தியிலேயே நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தொடர்ச்சியான தாமதங்களுக்கு மத்தியில் 13 மணி நேரம் நீடித்த பாராளுமன்ற அமர்வில் நேற்று அதிகாலை 1 மணிக்கே வாக்கெடுப்பு இடம்பெற்றது.





முன்னதாக, பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த தேசிய அவையில் சபாநாயகர் அசாத் கைசர் இன்னும் அனுமதிக்காததால், உச்ச நீதிமன்றத்தின் கதவுகளை சனிக்கிழமை நள்ளிரவைக் கடந்த இரவு 12 மணிக்கு திறக்க பாகிஸ்தான் தலைமை நீதிபதி முடிவு செய்தார்.

இதற்கிடையே, பாகிஸ்தான் பாராளுமன்றமான தேசிய அவையின் அமர்வு இரவு 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது, சனிக்கிழமை மட்டும் நான்கு முறை பாராளுமன்ற அலுவல் ஒத்திவைக்கப்பட்டது.

மொத்தம் உள்ள 342 உறுப்பினர்களைக் கொண்ட அவையில் 174 உறுப்பினர்கள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். இந்த அமர்வை வழிநடத்தும் தலைவராக செயல்பட்ட பி.எம்.எல்என் கட்சியின் அயாஸ் சாதிக், வாக்கெடுப்பு முடிவை அறிவித்தார்.

இதற்கு இடையே, பாகிஸ்தான் இராணுவ தளபதி ஜெனரல் கமர் ஜாவேத் பாஜ்வா, பிரதமர் இல்லத்தில் இம்ரான் கானைச் சந்தித்தார். பின்னர் அவர் பிரதமரின் அதிகாரபூர்வ இல்லத்தில் இருந்து தமது தனி குடியிருப்புக்கு சென்றதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன.

வரும் 2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறாது. முன்கூட்டிய தேர்தலை விரும்புவதாக எதிர்க்கட்சி கூறியபோதும், நீதி மற்றும் நியாயமான தேர்தலை உறுதி செய்ய வேண்டி இருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

கானின் வெளியேற்றம் பாகிஸ்தான் வரலாற்றின் தொடர்ச்சியான அரசியல் ஸ்திரமற்ற சூழலை காட்டுவதாக உள்ளது. பாகிஸ்தான் சுதந்திரம் பெற்றது தொடக்கம் எந்தப் பிரதமரும் தமது முழுமையான தவணைக் காலத்தையும் பூர்த்தி செய்ததில்லை. எனினும் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் பதவி நீக்கப்படும் முதல் பிரதமராக இம்ரான் கான் உள்ளார்.

பாகிஸ்தானின் சுதந்திரத்தின் பின்னரான 75 ஆண்டு காலத்தில் கிட்டத்தட்ட பாதி அளவான காலம் இராணுவ ஆட்சியே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

2018ஆம் ஆண்டு இராணுவத்தின் ஆதரவோடு பதவிக்கு வந்த இம்ரான் கான் தற்போது இராணுவத்தின் ஆதரவையும் இழந்திருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் அடுத்த பிரதமர் பதவிக்கான போட்டியில் முன்னிலையில் இருப்பவரான ஷபாஸ் ஷரீப், கானின் வெளியேற்றம் புதிய ஆரம்பம் ஒன்றுக்கான வாய்ப்பாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

"புதிய விடியல் ஒன்று ஆரம்பமாகியுள்ளது. இந்தக் கூட்டணி பாகிஸ்தானை மீளக் கட்டியெழுப்பும்" என்று 70 வயதான ஷரீப் பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஷபாஸ் ஷரீப் பாகிஸ்தானில் மூன்று முறை பிரதமராக இருந்த நவாஸ் ஷரீபின் இளைய சகோதரராவார். பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுத்த நவாஸ் ஷரீப் மருத்துவ சிகிச்சைக்காக விடுதலை பெற்ற நிலையில் தற்போது இங்கிலாந்தில் வாழ்ந்து வருகிறார்.

அரசியல் அனுபவம் பெற்ற அவர் முன்னர் பஞ்சாப் மாகாண முதலமைச்சராக பதவி வகித்துள்ளார்.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி தலைவரான ஷபாஸ் ஷரீபை பிரதமராக தேர்ந்தெடுத்து எதிர்க்கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளது. இதனால் அவர் புதிய பிரதமராக தேர்வு செய்யப்படுவது உறுதியாகியுள்ளது.

## இந்திய ரெயில்வேக்கு ஊக்கம் அளித்திருக்கும் 'வந்தே பாரத்'



வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் இந்திய ரெயில்வேக்கு பெரும் ஊக்கத்தை ஏற்படுத்தி இருப்பதாக சவூதி கசட் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் அதிக எண்ணிக்கையான மக்கள் நீண்டதூர பயணங்களுக்கு இன்னும் ரயிலை பயன்படுத்துவதோடு இது சராசரியாக கிட்டத்தட்ட 95 வீதமான நாடுகளின் மக்கள்தொகையை விட அதிகமாக உள்ளது என்று அந்த செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் நகரங்களுக்கு இடையிலான இந்தியாவின் முதல் பகுதி அதிவேக ரயில் சேவை என்பதோடு இரு பாதைகளில் மாத்திரமே ஆரம்பத்தில் அது இயங்கியது. இது மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் 18 மாத காலத்திற்குள் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டது.

இந்திய அரசு வரும் 2023 ஜூலை மாதத்தை கெடுவாகக் கொண்டு 75 ஆவது சுதந்திர தினத்தில் இருந்து 75 வாரங்களுக்குள் உலகெங்கும் 75 வந்தே பாரத் ரயில்களை அறிமுகம் செய்ய இலக்கு வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மே 21இல் ஆஸி. பொதுத் தேர்தல்

அவுஸ்திரேலியாவில் மே 21ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அந்நாட்டுப் பிரதமர் ஸ்கொட் மொரிசன் நேற்று கூறியுள்ளார்.



அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவினம், பருவநிலை மாற்றம், முக்கியக் கட்சிகளின் தன்மையும் திறனும் பற்றிய கேள்விகள் ஆகியவை குறித்த விவாதங்கள் பிரசாரத்தில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


9 ஆண்டுகால ஆட்சிக்குப்பின்னர் எதிர்க்கட்சியான தொழிற்கட்சியை விட மோரிசனின் பழைமைவாதக் கூட்டணி பின்தங்கி இருப்பதாக கருத்துக்கணிப்புகள் காட்டுகின்றன.

மே 2019இல் நடந்த தேர்தலுக்கு முன்னர் இதேபோன்ற கருத்துக்கணிப்புகளில் மொரிசன் பின்தங்கினார். இருப்பினும் அதில் அவர் வெற்றிபெற்றார்.

தேர்தல் குறித்து நிச்சயமற்ற நிலைமை இருந்தாலும் இந்தத் தேர்தலும் பிரசாரமும் மிகவும் முக்கியமானவை என்று மொரிசன் குறிப்பிட்டார். முன்னாள் பிரதமர் ஜோன் ஹோவர்டுக்கு பின் எந்த பிரதமரும் தொடர்ந்து இருமுறை தேர்தலில் வெற்றி பெற்றதில்லை என்ற நிலையில் பிரதமர் ஸ்கொட் மொரிசன் இந்த தேர்தலை எதிர்கொள்கிறார்.

## பாக். வர்த்தக பற்றாக்குறை 9 மாதங்களாக அதிகரிப்பு

பாகிஸ்தானின் வர்த்தகப் பற்றாக்குறை கடந்த ஒன்பது மாதங்களாக தொடர்ந்து அதிகரித்து வருவதாக பாகிஸ்தான் புள்ளிவிபரவியல் பணியகம் தெரிவித்துள்ளது.



ஏற்றுமதிகள் மாதமொன்றுக்கு சுமார் 2.5 பில்லியன் டொலர் முதல் 2.8 பில்லியன் டொலர்கள் வரை தேக்கமடைந்த நிலையில், இறக்குமதியில் முன்னொரு போதும் இல்லாத வகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது என்றும் அப்பணியகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றதென "த டவுன்" குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை வருடா வருடம் 70 வீதம் அதிகரித்து கடந்த மார்ச் மாதம் வரையிலான ஒன்பது மாதங்களில் 35.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. இறக்குமதிகள் சுமார் 60 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளது.

என்றாலும் பொருட்களின் வருடாந்த ஏற்றுமதி இலக்கு 31.2 பில்லியன் டொலராகவும், சேவைகளுக்கான இலக்கு 7.5 பில்லியன் டொலராகவும் இருக்குமென அரசாங்கம் கணித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஒஸ்காரில் ஸ்மித்துக்கு பத்து ஆண்டுகள் தடை

ஒஸ்கார் விருது விழா மற்றும் ஏனைய அகடமி நிகழ்வுகளில் கலந்துகொள்ள ஹொலிவுட் நடிகர் வில் ஸ்மித்துக்கு 10 ஆண்டுகள் தடை விதித்து அகடமி அமைப்பு உத்தரவிட்டுள்ளது.

ஒஸ்கார் விருது விழாவில் தொகுப்பாளர் கிறிஸ் ரொக்கின் கன்னத்தில் அறைந்ததற்காகவே அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்மித் அரங்கில் காண்பித்த ஏற்க முடியாத மற்றும் துன்புறுத்தும் நடத்தை 94 ஆவது ஒஸ்கார் நிகழ்வை மறைத்துவிட்டது என்று அகடமி அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.



தனது செயலுக்காக மன்னிப்புக் கோட்ட ஸ்மித், அகடமி அமைப்பில் இருந்து விலகினார். தனது மனைவியை கேலி செய்ததை அடுத்தே அவர் தொகுப்பாளரை தாக்கினார்.

எனினும் அந்த ஒஸ்கார் விருதில் கிங் ரிச்சர்ட் திரைப் படத்திற்காக அவர் சிறந்த நடிகருக்கான விருதை வென்றார். அந்தத் திரைப் படத்தில் அவர் டென்னிஸ் நட்சத்திரங்களான வீனஸ் மற்றும் செரீனா வில்லிம்ஸின் தந்தையாக நடித்திருந்தார்.

## ஷங்ஹாயில் 4ஆவது நாளாக வைரஸ் தொற்று பரிசோதனை

சீனாவின் ஷங்ஹாய் நகரம் தொடர்ந்து நான்காவது நாளாகப் பெரிய அளவில் வைரஸ் தொற்றுப் பரிசோதனைகளை நடத்துகிறது.

அந்த நகர மக்கள் இரண்டு நாளுக்கு ஒருமுறை பரிசோதனை செய்யப்பட்டனர்.

வைரஸ் பரவலை முறியடிப்பதில் ஷங்ஹாயின் தோல்வியை அந்நகரின் துணை மேயர் ஒப்புக்கொண்டார். அனைவரின் எதிர்பார்ப்பையும் நிறைவேற்ற சிறந்த முறையில் செயல்பட அவர் உறுதியளித்தார்.



நகரம் முழுவதும் நடப்பில் உள்ள முடக்கம் விரைவில் அகற்றப்படும் என்று ஷங்ஹாய் துணை மேயர் கூறினார்.

அண்மைய பரிசோதனை முடிவுகளுக்கேற்ப நகரம் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்படும். 2 வாரங்களில் புதிதாக வைரஸ் தொற்று கண்டறியப்படாத பகுதி "முன்னெச்சரிக்கை" வட்டாரமாகக் கருதப்படும்.

அங்கு வசிப்போர் நடமாடத் தடையில்லை. ஆனால் ஒன்றுகூடக் கூடாது. கட்டுப்படுத்தப்பட்ட வட்டாரமாக வகைப்படுத்தப்படும் இடங்களில் உள்ளவர்களும் குறிப்பிட்ட குறுகிய அக்கம் பக்க வட்டாரத்தில் நடமாடத் தடையில்லை.

அதிக அபாயமுள்ள வட்டாரத்தில் வசிப்போர் தொடர்ந்து வீடுகளிலேயே இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 11 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

06 முதல் 11 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.50 |
| ளுஹர் | 12.14 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

இன்றைய சுபதினம்

பிலவ வருடம் பங்குனி 28

ராகுகாலம் : காலை : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: தசமி



# நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திட மாட்டோம் ; இது நாட்டை சீர்குலைக்கும் முயற்சி

## சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகள் குழு அறிவிப்பு

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிடப் போவதில்லை எனவும் இவ்வாறானதொரு சூழ் நிலையில் தேர்தலுக்குச் செல்லும் நம்பிக்கையில் சில சக்திகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதாக தேசிய சுதந்திர முன்னணி தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர எம்.பி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவது நாட்டை மேலும் சீர்குலைக்கும் எனவும், நாட்டை சீர்குலைக்கும் எந்தவொரு தீர்மானத்திற்கும் அரசாங்கத்தின் கூட்டணி கட்சிகள் உடன்பட போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை மற்றும் ஜனாதிபதிக்கு எதிராக பதவி நீக்க பிரேரணை கொண்டு வருவோம் என எதிர்க்கட்சி கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்தது. சர்வ ஜன வாக்கெடுப்புக்கு செவிசாய்க்கா விட்டால் அரசியலமைப்பு ரீதியாக பிரச்சினைக்கு தீர்வுகாண தயார் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இதன்படி, அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்துள்ள 41 ஆளும் தரப்பு எம்.பிகளின் ஆதரவை பெற எதிரணி முயன்றுவரும் நிலையில் சுயாதீனமாக செயற்படப் போவதாக அறிவித்துள்ள 11 கட்சிகளின் கூட்டணி ஆதரவுவழங்க மறுத்துள்ளது. தமிழ் கட்சிகள் நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிப்பதாக அறிவித்துள்ள போதும் சு.க இதுவரை தீர்மானிக்கவில்லை என அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் நாட்டின் பல பாகங்களிலும் எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்த நிலையில் அமைச்சர்கள் தமது பதவிகளை ராஜினாமா செய்துள்ளதோடு இடைக்கால அரசு அமைக்க ஜனாதிபதி எதிரணிக்கு அழைப்பு விடுத்தார். இதனை எதிரணி நிராகரித்துள்ளதோடு அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர நடவடிக்கை எடுத்தது. (பா)

## ரமழான் சிந்தனை

### ரய்யான் வாயிலின் சிறப்பு

அல்லாஹ்தஆலா பல்வேறு மகத்துவங்களும் சிறப்புக்களும் கொண்டதாக நோன்பை ஆக்கி வைத்திருக்கின்றான். மனிதனது ஈருலக வாழ்வின் சுபீட்சத்தையும் விமோசனத்தையும் இலக்காகக் கொண்டிருக்கின்றது நோன்பு.

அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் ஏற்ப இக்கடமையை நிறைவேற்றும் போது சுவர்க்கத்தை அடைந்து கொள்ளலாம். பூமியில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும், தனது வாழ்வின் இலக்காகவும் நோக்காவும் கொள்ள வேண்டியது சுவர்க்கம் என்பது தான் இஸ்லாத்தின் அடித்தளம். அதனால் இறைவிசுவாசிகள் ஒவ்வொருவரும் அந்த சுவர்க்கத்தை அடைந்து கொள்வதை இலக்காகக் கொண்டு தம் வாழ்வொழுங்கை அமைத்துக்கொள்ள வேண்டும்.

அந்த வகையில் நோன்பை நோற்று இறைவணக்கங்களுடன் இக்கடமையை நிறைவேற்றுபவர்கள் சுவர்க்கத்தில் பிரவேசிக்கவென அல்லாஹ்தஆலா தனியான நுழைவாயிலொன்றை ஏற்பாடு செய்து வைத்துள்ளான். அது தான் 'ரய்யான்' என்ற மகத்துவம் மிக்க வாயிலாகும். .

இவ்வாயில் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது, 'சுவர்க்கத்தில் ஒரு வாயில் உள்ளது. அது ரய்யான் என அழைக்கப்படுகிறது. மறுமை நாளில் நோன்பாளிகள் இவ்வாயில் ஊடாகவே சுவர்க்கத்தில் நுழைவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அவ்வாயில் ஊடாக பிரவேசிக்க மாட்டார்கள். மறுமை நாளில் 'நோன்பாளிகள் எங்கே?' என்று அழைப்பு விடுக்கப்படும். அப்போது நோன்பாளிகள் எழுந்து சென்று அதில் நுழைவார்கள். அவர்கள் நுழைந்ததும் அவ்வாயில் மூடப்பட்டு விடும். அதன் ஊடாக நோன்பாளிகள் தவிர்ந்த வேறு எவரும் பிரவேசிக்க மாட்டார்கள்' என்றுள்ளார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

இந்நபிமொழி நோன்பு எவ்வளவு மகத்துவத்துக்கும் சிறப்புக்கும் உரிய செயற்பாடு என்பதை தெளிவுபடுத்திக் கொணடிருக்கின்றது. ரமழான் நோன்பைக் கடமையாக்கியுள்ள அல்லாஹ் அக்கடமையை நிறைவேற்றுபவர்களுக்கு உயரிய வெகுமதிகளையும் ஏற்பாடு செய்தே வைத்திருக்கின்றான்.

ஆகவே மகத்துவம் மிக்க சுவர்க்கத்தினுள் ரய்யான் வாயில் ஊடாக பிரவேசிக்கும் பாக்கியத்தை அடைந்து கொள்வதை இலக்காகக் கொண்டு இந்நோன்பு காலத்தை அமைத்துக் கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...

## பொலிஸ் உத்தரவை மீறி பயணித்த லொறி சாரதி கைது

கொட்டாவ அதிவேக நெடுஞ்சாலையில் பொலிஸாரின் உத்தரவை மீறி சிறிய லொறி ஒன்று வெளியேறும் வாயிலை உடைத்துக்கொண்டு செல்வது கொட்டாவ அதிவேக வீதியில் பொருத்தப்பட்டுள்ள CCTV கெமராவில் பதிவாகியுள்ளது.

கடவத்தையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த லொறி பணம் செலுத்தாமல் வெளியேறும் வாயிலை உடைத்துக்கொண்டு சென்றுள்ளது.

பின்னர் லொறி மற்றும் இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.

## நீரில் மூழ்கி 8 வயது சிறுவன் பலி நெலுவவில் சம்பவம்

நெலுவ பிரதேசத்தில் நீரில் மூழ்கி சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பலேகெதர வீதியின் குறுக்கே நிரம்பி வழியும் இன்கல் ஓடையின் ஊடாக வீதியைக் கடக்க முற்பட்ட போது தாயுடன் நான்கு பிள்ளைகள் நீரில் மூழ்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.அவர்களில் ஒரு சிறுவன் மாத்திரம் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பலேகெதர பகுதியைச் சேர்ந்த 8 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் மேலதிக விசாரணை நடத்கின்றனர்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பின்னணியில் வேறு குழுவும்

### பேராயர் ரஞ்சித் மல்கம் சந்தேகம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மட்டுமன்றி வேறொரு சக்தியும் இருப்பதாக பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்திருந்தது. முன்னாள் ஜனாதிபதியின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் எவரும் தண்டிக்கப்படவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கடந்த ஆட்சியில் தாக்கல் செய்யப்பட்ட இருவழக்குகள் நிராகரிக்கப்படும் நிலையில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த அரசுக்கு 3 மாதங்களே ஆட்சி செய்ய கிடைத்ததாகவும் ஏனைய காலப்பகுதியில் நெருக்கடி ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நிறைவேற்று அதிகார முறைமை; 6 தமிழ் கட்சிகள் வலியுறுத்து

### மாவை, விக்கி, செல்வம், சித்தா, சுரேஷ், ஸ்ரீகாந்தா கடிதம்

கொழுந்து விட்டெரியும் அமைதி குலைவுக்கு முடிவு கட்டவும், பொருளாதார நெருக்கடியை கட்டுப்படுத்தி மக்களின் அன்றாட வாழ்வை படிப்படியாகவும் விரைவாகவும் சகஜ நிலைக்கு கொண்டு வரவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கி, அதற்கு பதிலாக பாராளுமன்ற ஆட்சி முறைக்கு நாடு திரும்பிச் செல்லவேண்டும் என்று தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஆறு கட்சிகள் கூட்டிணைந்து வலியுறுத்தியுள்ளன.

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதிபதி சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்றஉறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் க.பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா ஆகியோரே இவ்வாறு கூட்டு வலியுறுத்தலைச் செய்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைத் தீவு தனது வரலாற்றில் சந்தித்திராத

06



ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் ஆதரவு தெரிவித்து நேற்று பலபகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. கண்டி மற்றும் ஹிரியால பகுதியில் நடத்தப்பட்ட ஆர்ப்பட்டத்தில் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரை காணலாம்.

உலமா சபையின் பெயரில்;

## வெளிவரும் உறுதிப்படுத்தப்படாத செய்திகளை எவரும் நம்ப வேண்டாம்

### அ.இ.ஜ.உலமா பதில் பொதுச் செயலாளர் மௌலவி தாஸீம்

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வெளியிட்டதாக சில பொய்யான செய்திகள் தொடர்ந்தும் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டு வருகின்றன. தற்போது நாட்டில் நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்களும் அவை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் ஜம்இய்யாவின் பெயரில் பரப்பப்பட்டு வரும் பிழையான செய்திகள் மற்றும் உறுதிப்படுத்தப்படாத செய்திகளை எவரும் நம்பவோ அல்லது பரப்பவோ வேண்டாம் என ஜம்இய்யத்துல் உலமாவின் பதில் பொதுச்செயலாளர் மௌலவி அஷ்ஷைக் எம்.எஸ்.எம். தாஸீம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுமக்களுக்கான ஜம்இய்யாவின் சகல அறிவித்தல்களும் அதன் உத்தியோகபூர்வ இணையதளத்திலும்

06

## இன்றும் நாளையும் அரசாங்க விடுமுறை

### அத்தியாவசிய சேவைகள் இயங்கும்

இன்றும் (11), நாளையும் (12) அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ள போதும் அது அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளை கொண்டு நடத்துவதற்கு தடையாக அமையக்கூடாது என பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வங்கிச் சேவைகள் இன்றும் நாளையும் இடம்பெறும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 11 ஆம், 12 ஆம் திகதிகள் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளன.

06

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த

## ஒரு கோடி ரூபாய் ஐஸ் போதைப்பொருள் மீட்பு



### ராமேஸ்வரத்தில் பறிமுதலானது

ராமேஸ்வரத்தில் இருந்து கடல் வழியாக படகு மூலம் இலங்கைக்கு கடத்த முயன்ற ஒரு கோடி மதிப்பிலான ஐஸ் போதைப்பொருள் நேற்று முன்தினம் (9) மீட்கப்பட்டதோடு, போதைப்பொருள் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரை கைது செய்து விசாரித்து வரும் ராமேஸ்வரம் பொலிஸார், மேலும் ஒருவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு சமீப காலமாக கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

தமிழகத்திலிருந்து கடல் அட்டைகள், மஞ்சள், கஞ்சா உள்ளிட்டவை கடத்தப்பட்டு

06

## தமிழருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் உதவவும்



### ஸ்டாலினிடம் TNA கோரிக்கை

இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு மாத்திரமல்லாமல் அனைத்து மக்களுக்கும் உதவிகளை வழங்குமாறு தமிழக முதல்வர் ஸ்டாலினிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரியுள்ளது.

இலங்கையில், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், தலைநகர் கொழும்பிலும் வசிக்கும் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் நலன் கருதி, தமிழக அரசு அத்தியாவசிப் பொருட்களை வழங்கத் தயாராகவுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரிடம் தமிழக முதலமைச்சர் எம்.கே.ஸ்டாலின் தெரிவித்ததுடன் இப்பொருட்களை விநியோகிப்பதற்கு

06







கொழும்பு காலி முகத்திடலிலும் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாகவும் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரை காணலாம்.


தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 28ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 09

## குறள் தரும் சிந்தனை



ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை

உறுதியான ஊக்கமுடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களிடமே உயர்வு போய்ச் சேரும்.

## அனைவரும் ஒன்றுபட்டு தீர்வு காண வேண்டிய நெருக்கடி

கொவிட் 19 தொற்றின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடி நாட்டில் நிலவிக் கொண்டிருக்கின்றது. இதனை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதேநேரம் இந்நெருக்கடி மக்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்த்து அதனைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பொருளாதார நெருக்கடிக்கு டொலர் பற்றாக்குறை பிரதான காரணமாக விளங்குகின்றது. இதன் விளைவாக எரிபொருள் பற்றாக்குறை முக்கிய இடத்தைப் பெற்று இருக்கின்றது. அதனால் நாளாந்த மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஏனெனில் நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தில் பெரும்பகுதி குறிப்பிடத்தக்களவு எரிபொருளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுவதே அதற்கான காரணமாகும்.

இவ்வாறான நெருக்கடிகளின் விளைவாக உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் பெரிதும் அதிகரித்துள்ளன.

அதேநேரம் தற்போது நாட்டில் நிலவி வரும் இப்பொருளாதார நெருக்கடி ஒன்றுடனொன்று தொடர்புபட்ட விவகாரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் அதனைத் தணித்து கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி இருக்கின்றது.

இந்த நிலையில் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக நிதியமைச்சர் அலி சப்ரி தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இரண்டொரு தினங்களில் அமெரிக்காவுக்குப் பயணிக்க உள்ளனர். இது தொடர்பான சந்திப்புடன் கூடிய கலந்துரையாடல் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஐந்து நாட்களுக்கு நடைபெற உள்ளது.

இந்தச் சூழலில் இப்பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப்படுகின்றன. இந்த நிலையில் நிதியமைச்சர் அலி சப்ரி, 'தற்போதைய பொருளாதார நெருக்கடி ஏற்பட ஒரு சிலரது தவறான தீர்மானங்கள்தான் காரணம் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனபோதிலும் நாடு வங்குரோத்து நிலையை அடையவில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வரும் அரசாங்கம் என்ற வகையில், தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுவதும் இந்த நிலைக்கு ஒரு சிலரின் தவறான தீர்மானங்கள் காரணம் என்பதுவும் மிகுந்த பொறுப்போடு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தின் உண்மையான வெளிப்படைத்தன்மையின் வெளிப்பாடாகும்.

தற்போது நாடு தீர்மானமான காலக்கட்டத்தை அடைந்திருக்கின்றது. அதன் காரணத்தினால் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து பொருளாதார நெருக்கடியைத் தணித்துக் கட்டுப்படுத்தவென வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்கேற்ப அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி மக்களுக்கு சுமையாக அமைவதைத் தணித்துக் கட்டுப்படுத்துவதே இந்நடவடிக்கைகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதனால் இவ்வேலைத்திட்டங்களுக்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு ஒத்துழைப்பும் ஆதரவும் நல்க வேண்டும். அதுவே இன்றைய அவசியத் தேவையாகும்.

இருந்த போதிலும் இப்பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி அற்ப அரசியல் இலாபம் தேடும் முயற்சிகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அதற்கான நேரகாலம் இதுவல்ல.

என்றாலும் தற்போதைய பொருளாதார சூழலில் எதிர்க்கட்சிகளும், அரசாங்கத்தில் அங்கம் வகித்த கட்சிகளும் எடுத்துள்ள நிலைப்பாடுகள் இந்நெருக்கடிக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கக் கூடியவை அல்ல. ஆளுக்காள் கட்சி ரீதியாகப் பிரிந்து நிற்பதும், அற்ப அரசியல் இலாபம் தேடும் முயற்சிகளை முன்னெடுப்பதும், ஊர்வலங்களை நடத்துவதும் இப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத் தராது. நெருக்கடி நிலை தொடரவே வழிவகுக்கும்.

தேர்தலின் போது மக்கள் தங்களது வாக்குகளை அளித்து தங்கள் பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவு செய்தது, தங்களது தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கேயாகும். இதை விடுத்து மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் போது அதற்குத் தீர்வு தேட நடவடிக்கைகளை முன்னெடுக்காது அற்ப அரசியல் இலாபம் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது முறையல்ல. அதனை பாராளுமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் மக்களின் கருத்தாக உள்ளது.

ஆகவே இப்பொருளாதார நெருக்கடியைத் தணித்துக் கட்டுப்படுத்தவென முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு சகலரும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவது மிகவும் அவசியமான விடயம். அதுவே இன்றைய உடனடித் தேவையுமாகும்.

editor.tkn@lakehouse.lk

# அகஇருள் நீக்கும் ஞானசூரியனாய் திகழ்பவர் சிவயோக சுவாமிகள்

**58 ஆவது குருபூசை தினம் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் இன்று அனுஷ்டிப்பு**

சிவயோக சுவாமிகளது 58ஆவது குருபூசை நாள் இன்றைய தினம் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. சிவதொண்டன் நிலையத்திலே சற்குரு யோகருக்குத் திவ்வியமான அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அன்பரெல்லாம் ஒன்றுகூடி வழிபாடு செய்வர். இன்று பங்குனிக் கடைசித் திங்களுமாகும். யோகர் சுவாமிக்கு பொங்கலிட்டு, வழிபாடு நடத்துவர்.

இந்நன்னாளிலே குருவாக்கைத் துணைகொண்டு குருவின் பெருமையறிந்து போற்றுதல் நன்று. குருநாதர் பாடிய நற்சிந்தனைப் பாடலொன்றின் ஆறு வரிகள் இவை:

'தன்மை முன்னிலை படர்க்கை யற்றவன்
தன்னை யுணர்ந்தவச் சற்குரு வாமே.
பின்னைப் பிறப்பிறப் பவனுக்கில்லை
முன்னை வினையின் முடிச்சவிழ்த் தானே.
அன்னை பிதாகுரு தெய்வம் அவனே
அவனை வணங்கினோர் அருந்தவத் தோரே."

சற்குருவானவர் அவரது அடியவர்க்கு மட்டுமானவரல்லர். அவர் எல்லார்க்குமானவர். யோகசுவாமிகள் ஆசாரசீலர்க்கு மட்டுமன்றி அனாச்சாரிகளோடும் அன்பு பூண்டிருந்தார். சைவரோடு சைவரல்லாதாருக்கும் அருள் சுரந்தவர். அவர் சாதி, சமயம் என்னும் சங்கடத்துக்குள்ளாகாதவர். எங்கும் செறிந்தவராயிருப்பது போலவே என்றுமுள்ளவராயும் இருக்கின்றார்.

அவர் பிறப்பிறப்பைக் கடந்தவர். ஆதலால் அவர் என்றும் உள்ளவர். என்றுமுள்ள அவர் இன்றும் உள்ளார். இன்றும் எல்லாருடனும் கூடியிருக்கின்றார். எல்லாரிடத்தும் அருள் சுரக்கின்றார். எல்லாரதும் அறியாமை இருளை நீக்கும் ஞான



சூரியனாய் ஒளிர்கிறார். இருள் நீக்கும் சூரியன் போன்று அகஇருளை நீக்கி அருள்கின்றார். சூரியோதயத்தின் போது தடாகத்தில் உள்ள பருவ மொட்டுக்கள் மலர்கின்றன. சிறு கன்னிகளும் முதிர்கின்றன. அவ்வாறே குருவருளினால் பக்குவர்கள் மெய்யடியார்களாக மலர்கின்றனர். மற்றையோரும் தத்தம் படித்தரத்தினின்றும் உயர்கின்றனர். குருவருள் எல்லோரிடத்தும் பரவுகின்றது. ஆதலினால் குருபரனை வணங்குதல் நன்று. குருபக்தியே பெரும்பேறு. குருவை வணங்குவோரை அருந்தவத்தோர் என்று யோககுருபரன் கூறியிருக்கிறார்.

குருபூசை நாட்களிலே குருநாதன் கூறிய ஒரு விடயத்தையாதல் மனதில் பதித்து அவ்வாண்டு முழுதும் சிந்தித்துத் தெளிந்து அதன்படி வாழ்ந்து உறுதியுறுதல் நன்று.

"கடவுள் ஒருவர் இருக்கிறார்
அவர் எங்கும் இருக்கிறார்
என்னோடும் கூட இருக்கிறார்.
எனக்குச்சக சம்பத்தும் உண்டு"

என்று பெரியார் கூறுகின்றார்கள். அதை நாம் நம்பி வாழ்கிறோம்.

சிவதொண்டன் சபையினர்,
434, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# அனைத்து விருதுகளுக்கும் தகுதி நிறைந்த எழுத்தாளர் ஜெயகாந்தன்

**ஏழாவது ஆண்டு நினைவு தினம்**

அகிலம் போற்றிய தமிழக பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களின் 07 ஆம் ஆண்டு நினைவு தினம் கடந்த 08.04.2022 அன்று அனுஷ்டிக்கப்பட்டது. ஜெயகாந்தன் ஞான பீட விருது, சாகித்திய அகடமி விருது பெற்ற புகழ் பெற்ற எழுத்தாளராவார்.

அவர் ஏப்ரல் 24, 1934 இல் பிறந்தார். ஏப்ரல் 8, 2015 இல் தனது 80 வயதில் அமரரானார். இந்திய அரசின் இலக்கியத்திற்கான உயர் விருதான ஞான பீட விருதைப் பெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர் இவர். இவருடைய படைப்பிலக்கியக் களம் சிறுகதைகள், புதினங்கள்,கட்டுரைகள், திரைப்படங்கள் எனப் பரந்து இருக்கின்றது.ஏப்ரல் 24, 1934இல் கடலூரில் பிறந்தார்.



மற்றைய எழுத்தாளர்களின் படைப்புகளுக்கும் இவருடைய படைப்புகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கும். இதுவே ஜெயகாந்தனின் எழுத்துலக எழுச்சிக்கு வித்திட்டது. இவருடைய படைப்புகள் உணர்வு பூர்வம் நிறைந்ததாக அமைந்திருக்கும். இவரின் சில நாவல்கள் திரைப்படங்களாக வெளியாகி வெற்றி பெற்றன.

கைவிலங்கு நாவல் 'காவல் தெய்வம்' என்ற பெயரில் வெளியானது. நடிகர் எஸ்.வி.சுப்பையாவின் தயாரிப்பில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்,சிவகுமார், லட்சுமி,எம்.என்.நம்பியார்,ஓ.ஏ.கே.தேவர் நடிப்பில் அத்திரைப்படம் வெளியானது. சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், யாருக்காக அழுதான் போன்ற படங்கள் இவரின் படைப்புக்களேயாகும்.

ஜெயகாந்தன் 1934ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பம் என்ற ஊரில், தண்டபாணிப்பிள்ளை, மகாலெட்சுமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் . பள்ளிப் படிப்பில் நாட்டம் இல்லாமையால், ஐந்தாம் வகுப்பிலேயே பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். உலகியல் அனுபவம் பெற வேண்டி, வீட்டை விட்டு வெளியேறி விழுப்புரம் சென்றார். அங்கு, அவர் மாமாவின் மேற்பார்வையில் வளர்ந்தார். அவர் ஜெயகாந்தனைப் பொதுவுடைமைக் கோட்பாடுகளுக்கும் பாரதியின் எழுத்துகளுக்கும் அறிமுகப்படுத்தினார்.

ஜெயகாந்தன் சில ஆண்டுகள் விழுப்புரத்தில் வாழ்ந்த பின்னர் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். அங்கு பெரும்பாலான நேரத்தை சி.பி.ஐயின் ஜனசக்தி அலுவலக அச்சகத்தில் பணிபுரிந்தும், ஜனசக்தி இதழ்கள் விற்றும் கழித்தார். 1949ஆம் ஆண்டு சி. பி. ஐ மீதும் அதன் உறுப்பினர்கள் மீதும் தடை போடப்பட்டது. ஆதலால் சில காலம் தஞ்சையில் காலணிகள் விற்கும் கடை ஒன்றில் பணிபுரிந்தார். இந்த எதிர்பாராத இடைவேளை அவர் வாழ்க்கையில் முதன்மையான காலகட்டமாக அமைந்தது. அவர் சிந்திக்கவும் எழுதவும் அப்பொழுது நேரம் கிடைத்தது. இக்கால கட்டத்தில், தமிழ்நாட்டில் முக்கிய அரசியல் மாற்றங்களும் நேர்ந்தன. தி.மு.க மற்றும் தி.க வின் வளர்ச்சியால், சி.பி.ஐ மெதுவாக மறையத் தொடங்கியது. உட்கட்சிப் பூசல்களினாலும், கட்சியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினாலும், ஜெயகாந்தன் சி.பி.ஐயிலிருந்து விலகினார். பின்னரகாமராஜருடைய தீவிர தொண்டனாக மாறித் தமிழகக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

அவரது இலக்கிய வாழ்க்கை 1950 களில் தொடங்கியது சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன், ஆனந்த விகடன் போன்ற ஏடுகளில் இவரது படைப்புகள் வெளியாயின. படைப்புகளுக்குப் புகழும் அங்கீகாரமும் கிடைத்தன. இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவராகப் போற்றப்பட்டார். ஜெயகாந்தன் சில ஆண்டுகள், தமிழ்த் திரையுலகிலும் வலம் வந்தார்.

இவரது நாவல்களான 'உன்னைப் போல் ஒருவன்' மற்றும் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' ஆகியவை படமாக்கப்பட்டன. இதில் 'உன்னைப் போல் ஒருவன்' சிறந்த மாநில மொழித் திரைப்படத்திற்கான குடியரசுத் தலைவர் விருதில் மூன்றாம் விருதைப் பெற்றது.

மேலும், அவருக்கும் ஒரு நடிகைக்கும் ஏற்பட்ட உறவே 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்' என்ற புதினமாக உருப்பெற்றது.

ரயிலில் டிக்கெட் இல்லாத பயணியாகப் புறப்பட்டு வந்த ஜெயகாந்தன் பார்த்த உத்தியோகங்கள் மளிகைக் கடைப் பையன், டொக்டரிடம் பை தூக்கும் வே லை, மாவு மெஷின் கூலி, தியேட்டரில் பாட்டுப் புத்தகம் விற்றது, அச்சுக் கோப்பாளர், பவுண்டரியில் என்ஜின் கரி அள்ளிப் போட்டது, தொழிற்சாலையில் கைவண்டி இழுத்தது, ஜட்கா வண்டிக்காரரிடம் உதவியாளர், பத்திரிகை ஒப்புநோக்காளர்,உதவி ஆசிரியர். பின்னர் முழு நேர எழுத்தாளர்.

அவர் எழுதிய நூல்கள் எண்ணிலடங்காதவை. அந்நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுலகில் பிரபல்யம் வாய்ந்தவை. இலக்கிய ஆர்வலர்களால் இன்றும் பேசப்படுபவை.

"ஜெயகாந்தன், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்குச் சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம்.

யதார்த்தத்தின் மற்றொரு பெயர் 'தத்ரூபம்' என்றால், ஜெயகாந்தனின் கதைகள் எல்லாம் அவ்வளவு தத்ரூபமாக இருந்தன. ஜெயகாந்தன் என்ற மேதாவிலாசமிக்க படைப்பாளியின் ஊற்றுக்கண் எங்கே இருந்து புறப்படுகிறது என்று அனுமானிப்பது கடினம்.

பாரதியார் வாழ்ந்த காலங்களில் கௌரவிக்கப்பட்டதில்லை. லியோ டால்ஸ்டாய் நோபல் பெறாதவர். போர்ஹே நோபல் பரிசுக்கு சிபாரிசு செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டவர். விருதும் கௌரவமும் சரியான நேரத்தில், சரியான நபருக்கு, சரியான அமைப்புகளால் வழங்கப்படுவது ஒரு போதும் நிகழ்வதில்லை. அதற்காக விருதுகளால் மட்டுமே எழுத்தாளர்கள் கௌரவம் அடைவதுமில்லை. ஜெயகாந்தன் எல்லா விருதுகளுக்கும் தகுதியானவர். எல்லா விருதுகளைத் தாண்டியும் மிகுந்த ஆளுமையும் உயர்வும், தனித்துவமும் கொண்டவர்.

எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்
கம்பளை.

**பாகிஸ்தானின் 75 ஆண்டு கால வரலாறு;**

# எந்தவொரு பிரதமரும் தனது ஆட்சிக் காலத்தை முழுமையாக இதுவரை நிறைவு செய்ததில்லை!

பாகிஸ்தான் அரசியல் வரலாற்றில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் நீக்கப்பட்ட முதல் பிரதமர் இம்ரான் கான் ஆவார். அதேசமயம் பாகிஸ்தானில் கடந்த 75 ஆண்டுகால வரலாற்றில் ஒரு பிரதமர் கூட முழுமையாக தங்களது பதவிக்காலத்தை நிறைவு செய்ததில்லை.

பாகிஸ்தானில் இம்ரான் கானின் நிர்வாகத் திறமையின்மையினால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. இதையடுத்து பாகிஸ்தான் பிரதமராக இருந்த இம்ரான் கானுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

அதன் மீதான வாக்கெடுப்பு தள்ளிக் கொண்டே போன நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இம்ரான் கான் ஆட்சி கவிழ்ந்தது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் வெளியேற்றப்பட்ட முதல் பிரதமர் இம்ரான் கான் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்ரான் கான் கடந்த 2018ஆம் ஆண்டு இராணுவத்தின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தவர். ஆனால் கொரோனாவால் பொருளாதார வீழ்ச்சி, பாகிஸ்தானை ஊழலற்ற நாடாக மாற்றுவேன் என வாக்குறுதியை நிறைவேற்றாதது உள்ளிட்டவைகளால் இம்ரான் கான் ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டது.

பாகிஸ்தானின் 75 ஆண்டு கால வரலாற்றில் இதுவரை ஒரு பிரதமர் கூட முழுமையாக தங்களது 5 ஆண்டு கால பதவியை முடித்ததில்லை. இதுவரை ஆட்சி செய்தவர்களில் 3 பிரதமர்கள் மட்டுமே 4 ஆண்டு பதவிக்காலத்தை முடித்துள்ளார்கள். அது போல் இதுவரை தெரிவு செய்யப்பட்ட சட்டசபைகளில் இரு சட்டசபைகள் மட்டுமே 5 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

கடந்த 1977ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை ஜெனரல் ஜியா தலைமையில் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நடைபெற்றது. அவர் விமான விபத்தில் இறந்ததை அடுத்து 1988 ஆம் ஆண்டு பெனாசீர் பூட்டோ பிரதமராக பதவியேற்றார். அவர் இரு ஆண்டுகள் மட்டுமே ஆட்சி செய்தார். இதையடுத்து 1990 ஆம் ஆண்டு நவாஸ் ஷெரீப் தலைமையிலான ஆட்சி அமைந்தது.



அவரது ஆட்சியும் 3 ஆண்டுகளே நீடித்தது. இதையடுத்து மீண்டும் பிரதமரானார் பெனாசீர் பூட்டோ. இவரது ஆட்சிக்காலம் 1993 ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை நீடித்தது. பின்னர் மீண்டும் நவாஸ் ஷெரீப் ஆட்சிக்கு வந்தார். அவர் 1997 முதல் 1997 வரை ஆட்சியில் இருந்தார். இதையடுத்து 1999_ 2007 ஆம் ஆண்டு வரை ஜெனரல் பர்வேஸ் முஷாரப் தலைமையில் இராணுவ ஆட்சி நடந்தது.

இவரை அடுத்து 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை யூசுப் ராஜா கிலானியும் 2012 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை ராஜா அஷ்ரப்பும் ஆட்சி செய்தனர். 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை நவாஸ் ஷெரீப்பும் 2017ஆம் ஆண்டு முதல் 2018ஆம் வரை ஷாஹித் காகன் அப்பாசியும் ஆட்சியில் இருந்தனர். இவர்களுக்கு அடுத்து 2018 ஆம் ஆண்டு இம்ரான் கான் பிரதமரானார். தற்போது அவரும் 4 ஆண்டுகளிலேயே ஆட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி முறைமையானது பெருமளவில் அருகிச் சென்று விட்டதாக சர்வதேச அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் அடுத்த ஜனாதிபதி யார் என்ற வாதம்;

# உண்மையான பிரச்சினைகளை பேசுவதற்கு யாருமில்லை

## ப்ரோடெக்ட் சங்கம்



**கினிகத்தேனை தினகரன் நிருபர்**

பாராளுமன்றத்தில் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு யாரை நியமிப்பது என்று வாதங்கள் நிலவுகின்றன. ஆனால் மக்களுடைய உண்மையான பிரச்சினைகளை பேசுவதற்கு யாரும் தயாரில்லை என்று புரோடெக்ட் அமைப்பு தெரிவித்துள்ளது.

ப்ரோடெக்ட் சங்கம் கினிகத்தேனையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வு மற்றும் அரசியல் ஸ்திரதன்மையை கருத்திற்கொண்டு கினிகத்தேனையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

குறிப்பாக ப்ரோடெக்ட் சங்கம் வீட்டுவேலைப் பணிப்பெண்களை உள்ளடக்கியதாகும். அந்த வகையில் தற்காலத்தில் வீட்டு பணிப்பெண்களாக இருப்பவர்கள் பல்வேறு வகையிலான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவித்தே இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இப் போராட்டம் தொடர்பாக புரோடெக்ட் அமைப்பின் நுவரெலியா மாவட்டத்திற்கான அமைப்பாளராக செயற்படும் கருப்பையா மைதிலி கருத்து தெரிவித்த போது,

ப்ரோடெக்ட் அமைப்பில் கூடுதலாக இருப்பது நாளாந்த கூலிவேலை செய்பவர்களாவர். தற்போது விலைவாசி உயர்வோடு இன்னும் பல்வேறு பிரச்சினைகளால் பல்வேறு சிரமங்களை சந்திக்கின்றனர். இதன் காரணமாக அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க வேண்டும். தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் பிரச்சினைகளை பேச வேண்டும். ஆனால் தற்போது ஒன்றும் இடம்பெறாததால் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கின்றனர்.

இன்று பொதுமக்கள் வீதிக்கு இறங்கியிருப்பது பணத்தை கேட்பதற்காகவல்ல, இன்று அரசாங்கம் பல்வேறு நாடுகளில் கடன்பட்டுள்ளது. மேலும் சர்வதேச நாணய நிதியத்தில் கடன்படுவதற்கும் எதிர்பார்த்துள்ளது. எனவே அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள் சொகுசு வாழ்க்கை வாழ ஏன் நாமும் எமது பரம்பரையே கடன் செலுத்த வேண்டும்.

நாட்டில் ஊழல் தலைவிரித்தாடுகின்றது. அதை பற்றி பேசுவதற்கு யாரும் தயாரில்லாத நிலையிலேயே இருக்கின்றனர். எனவே இவர்கள் கேட்காததன் காரணத்தில்தான் இன்று மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். எனவே மக்கள் வாக்களித்த 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் பிரச்சினைகளை செவிமெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

நாட்டின் இக்கட்டான நிலை;

# ஹற்றனில் சர்வமத அமைதி ஊர்வலம்






**ஹற்றன் சுழற்சி நிருபர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையில் இருந்து இந்த நாடு மீள வேண்டும் என்பதற்காக ஹற்றன் திருச்சிலுவை ஆலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வமத அமைதி வழி ஊர்வலமும் கவனயீர்ப்பும் ஹற்றனில் நடைபெற்றது.

ஹற்றன் திருச்சிலுவை ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட அமைதிவழி ஊர்வலம் ஹற்றன் நகர் ஊடாக புதிய ரயில் நிலைய கட்டட முன்றலை அடைந்ததும் அங்கு சுமார் ஒரு மணித்தியாலம் பதாதைகளை ஏந்தி அமைதியாக நின்றவர்கள் பின்னர் கலைந்து சென்றனர். இந்த ஊர்வலத்தில் பொது மக்களுடன் திருச்சிலுவை ஆலய குருக்கள், இந்து மத குருக்கள், கன்னியாஸ்திரிகள் என சுமார் 400ற்கும் மேற்பட்டவர்கள் கலந்துக் கொண்டிருந்தனர்.

# தமிழ்– சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஹற்றன் நகரில் விசேட பொலிஸ் பாதுகாப்பு

**ஹற்றன் விசேட நிருபர்**

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, ஹற்றன் நகரில் விசேட பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விஜித்த அல்விஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் புத்தாண்டு காலப்பகுதியில் மதுபோதையில் வாகனங்கள் செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்கான விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளது என்றார்.

மேலும் குறித்த காலப்பகுதியில் அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்வதற்காக, சிலர் எரிபொருள் கொள்வனவில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்த அவர், அவ்வாறு எரிபொருளை அதிக விலைக்கு விற்பனை செய்பவர்கள் கைது செய்யப்படுவர் என எச்சரித்துள்ளார்.

எனவே, புத்தாண்டு காலத்தில் பிரதேசத்தில் அமைதியைக் கடைபிடிக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவர் என எதிர்பார்ப்பதாக தெரிவித்த அவர், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.





தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு மாவனல்லை கிளசிக் கிரியசென் நிறுனத்தின் அலுவலகத்தில் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.சமகால பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்திற் கொண்டு இந்த உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.தொழிலதிபரும் கிளசிக் கிரியசென் நிறுவனத்தின் தலைவருமான எம். எம். பதூத்தினால் வழங்கி வைக்கப்பட்டன.6,500 பெறுமதியான உலருணவுப் பொதிகள் 200 குடும்பத் தாய்மார்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்

# கண்டி மாவட்ட பெருந்தோட்ட மக்களின் புத்தாண்டு எதிர்பார்ப்பு

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

கண்டி மாவட்ட மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை,இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன பெருந்தோட்டங்களில் ஓய்வு பெற்ற பின்பும் சேவைக் காலப்பணம், ஊழியர் சேமலாப நிதிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் இந்த சித்திரை புத்தாண்டிலாவது கிடைக்குமா? என்பதே இவர்களின் புத்தாண்டு எதிர்பார்ப்பாகும். மலையக பெருந்தோட்டங்களில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் இன்றைய வாழ்க்கை செலவை சமாளிப்பதற்கு கஷ்டப்படுகின்றனர்.அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது. இவர்களின் உழைப்புகேற்ற ஊதியத்தை எந்த அரசாங்கமும் ஆட்சிக்கு வந்தாலும் கிடைப்பதில்லை. ஆனால் தேர்தல் காலங்களில் பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த அரசியல்வாதிகள் தோட்ட மக்களின் பிரச்சினைகளை தீர்ப்போம் என்பார்கள். ஆட்சிக்கு வந்த பின் அதைபற்றி சிந்திப்பதில்லை.

கண்டி மாவட்ட மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன பெருந்தோட்டங்களில் ஓய்வு பெற்ற பின்பும் சேவைக் காலப்பணம், ஊழியர் சேமலாப நிதிகளை பெற்றுக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகின்றனர். இவர்களில் சிலர் உயிரிழந்தும் விட்டனர்.

ஆனால் எவ்வித பணமும் கிடைக்கவில்லை.இவற்றை பெற்றுக்கொடுக்க மலையக அரசியல்வாதிகள் முன்வர வேண்டும். மலையகம் என்பது நுவரெலிய மாவட்டம் மட்டுமல்ல என்பதை அரசியல் வாதிகள் தெரிந்துக்கொள்ள வேண்டும். இதுவே இந்த மக்களின் சித்திரை புத்தாண்டு எதிர்பார்ப்பாகும்.

# நாடு அராஜகத்தை நோக்கிச் செல்ல அனுமதிக்க முடியாது

## கெட்டம்பே ராஜோபவனாராமாதிபதி

**அக்குறணை குறூப் நிருபர்**



நாடு அராஜகத்தை நோக்கிச் செல்ல அனுமதிக்க முடியாது என பேராதனை கெட்டம்பே ராஜோபவனாராமாதிபதி வண. கெப்பெட்டியகொட சிறிவிமலாபிதான தேரர் தெரிவித்தார்.

தேரரின் 91ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே நேற்று வாழ்த்துத் தெரிவித்து நல்லாசி பெறச் சென்ற சமயம் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,..

தற்போது நாடு செல்லும் நிலையை ஜனநாயத்தை நேசிப்பவர்கள் என்ற அடிப்படையில் எம்மால் அனுமதிக்க முடியாது. அராஜகம் தலை தூக்கினால் நாம் கடந்த காலங்களில் அனுபவித்த அனைத்து சுதந்திரமும் பறிபோகும் நிலை ஏற்படலாம்.யாரும் நினைத்தவாறு சட்டத்தை கையில் எடுக்க அனுமதிக்க முடியாது என்றார்.

# நுவரெலியா இராகலை டெல்மோர் தோட்டத்தில் மண்சரிவு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நுவரெலியா டெல்மோர் தோட்ட மேற்பிரிவில் நேற்று பெய்த கனமழையால் கோயில் கட்டடத்தின் கீழ் பகுதியிலுள்ள மண் மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இந்த மண்சரிவில் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவத்தில் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





## நாட்டின் பல...

கொட்டும் மழைக்கு மத்தியில் ஜனாதிபதிக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக கொழும்பு உட்பட சில பகுதிகளில் போராட்டம் நடத்தப்படும் நிலையில் அவருக்கு ஆதரவாக பெருமளவான மக்கள் தமது ஆதரவை வெளிப்படுத்த வீதிக்கு வர ஆரம்பித்துள்ளதாக அறிய வருகிறது.

## நாட்டை விட்டு ...

மேலும் இந்த நாட்டை சேர்ந்தவர்களிற்கு தெரிந்தது போல நான் தீங்கிழைக்கும் வெறுக்கத்தக்க குற்றச்சாட்டுகளை அமைதியாகவே எதிர்கொண்டுள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

## நிறைவேற்று அதிகார... (03ஆம் பக்கத் தொடர்)

பாரிய பொருளாதாரப் பிரச்சினையால் மக்களின் அன்றாட வாழ்வே ஸ்தம்பிதம் அடைந்து விடக் கூடிய ஆபத்தான நிலைமை காரணமாக மிகத் தீவிரமானதோர் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

சாதாரணப் பொது மக்கள் பல்லாயிரக் கணக்கில் தாமாகவே வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதையும், சுகாதாரத்துறையினர் மற்றும் கல்வித்துறை சார்ந்தோர் உள்ளடங்கலாக சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் இந்த அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு உடனடியான தீர்வு கோரிப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலையை ஜனாதிபதியும் அரசாங்கமும் மற்றும் சகல அரசியல் கட்சிகளும் பொறுப்புணர்வோடு உரிய முறையில் கையாண்டு, அவசியமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்காவிடில் முழு நாடும் சீர்குலைந்து அராஜகம் தலைவிரித்து ஆடக் கூடிய மாபெரும் ஆபத்து உருவாகிக் கொண்டிருக்கின்றது.

தீ பரவுவதற்கு முன்னர் அதனைக் கட்டுப்படுத்தி முற்றிலுமாக அணைப்பதற்கான நடவடிக்கைகளே இப்பொழுது உடனடியான தேவை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

இந்த நெருக்கடி நிலைக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் கூட, அடிப்படையான காரணம் தனி ஒரு மனிதரின் கையில் நாட்டின் ஆட்சி அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையே என்பதில் பரந்துபட்டதும் தீவிரமானதுமான கருத்தோட்டம் எழுந்துள்ளது.

எனவே, நிறைவேற்று அதிகாரத்தினை நீக்கி பாராளுமன்ற ஆட்சி முறைக்குச் செல்லும் வகையிலான செயற்பாடு இலங்கையின் தேசிய மட்டத்தில் உடனடியாக மேற்கொள்ளப்படுவதற்கு ஏதுவாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் ஏகோபித்து உரிய தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என பகிரங்கமாக நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

இன்றைய நிலையில் பொறுப்புணர்வு மிக்கவர்களாக சகல அரசியல் தரப்புகளும் செயற்பட்டு, இந்த முடிவுக்கு வந்து, அதனை நடைமுறைப் படுத்திட உரிய நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுப்பதே நாடு எதிர்நோக்கி நிற்கும் மிகப் பாரிய பிரச்சினையை தீர்ப்பதற்குரூபவ் சரியான திசையில் எடுத்து வைக்கப்படும் முதலாவது அடியாக இருக்கும் என்பதையும் அழுத்திக் கூற விரும்புகின்றோம் என்றுள்ளது.

## மத்திய வங்கியின் செயற்பாடுகளில்...

பொருளாதார துறைசார் நிபுணர்களும் முன்வைக்கும் யோசனைகளை தாமதப்படுத்தாமல் செயற்படுத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அரச தலைவர்களிடம் வலியுறுத்தியுள்ளோம் என மத்திய வங்கியின் புதிய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

## இலங்கையர் 19 பேர்...

குறிப்பிட்டனர்.

இவ்வாறு தஞ்சமடைந்த 19 பேரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டதன் பின் முகாமிற்கு அழைத்து செல்லப்படுவார்கள் என்றும் தெரிவித்தனர்.

ஏற்கனவே 20 பேர் வந்தநிலையில் மேலும் 19 பேர் நேற்று தனுஷ் கோடிக்கு வந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக கடும் விலை உயர்வு, வேலையில்லா திண்டாட்டம் போன்ற பல்வேறு சிக்கல்களுக்கு மக்கள் முகம் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாகவே படகு மூலம் கடல் வழியாக இந்தியாவுக்கு புகலிடம் கோரி செல்கின்றனர்.

நாளுக்கு நாள் இவ்வாறு இந்தியாவில் தஞ்சமடைவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## 06 நேர்த்தேக்கங்களின்...

பணிப்பாளர் டி. அபேசிரிவர்தன் இதுதொடர்பாக தெரிவிக்கையில், தற்போதைய நீர் மட்டம் எதிர்வரும் சிறுபோக விவசாய நடவடிக்கைகளுக்கு போதுமானது என்றார். வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு, ஊவா, சப்ரகமுவ, மத்திய மாகாணங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இந்நிலையில், தொடரும் கடும் மழையுடனான வானிலை காரணமாக இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 6 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை...

பொருளாதார நெருக்கடிகளால் பொதுமக்கள் போராட்டங்களை மேற்கொண்ட நிலையில் பதவியில் இருந்த அரசாங்கத்தின் அமைச்சரவை இராஜினாமாச்செய்திருந்தது.

இந்நிலையில் நாட்டினைபொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீட்பதற்காக அனைத்துக் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கு தயார் என்று ஜனாதிபதி அறிவித்திருந்தார். பகிரங்கமான அழைப்பினையும் விடுத்திருந்தார்.

இருப்பினும், எந்தவொரு தரப்பினரும் ஒரு தற்காலிக ஏற்பாட்டின் அடிப்படையில் அவ்விதமான கட்டமைப்பில் பங்கேற்பதற்கு தயாராக இருக்கவில்லை.

இந்த நிலையில் பாராளுமன்ற ஜனநாயகத்தினை உறுதிப்படுத்துவதற்காக நான்கு அமைச்சர்கள் மீள் நியமனம் செய்யப்பட்டனர்.

நான் ஆரம்பத்தில் அமைச்சுப் பதவியை பெற்றபோதும் பின்னர் அமைச்சுப்பதவியையும் பாராளுமன்ற உறுப்புரிமையையும் இராஜினாமச் செய்யும் முடிவினை எடுத்து எழுத்துமூலமான அறிவிப்பினையும் விடுத்திருந்தேன்.

எனினும், ஜனாதிபதியால் எனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதோடு, எனக்கு வழங்கப்பட்ட நிதி அமைச்சுப் பதவியை யாரும் பொறுப்பேற்பதற்கும் முன்வந்திருக்கவில்லை.

எனவே, அடுத்த நிதியமைச்சர் ஒருவர் பதவியேற்கும் வரையில் நான் அப்பதவியில் நீடிப்பதற்கு இணங்கியுள்ளேன்.

அவ்வாறிருக்கையில் எதிர்க்கட்சிகள் நாட்டினை மீட்பதற்கான செயற்பாட்டில் பங்கேற்பதற்கு தயாராக இல்லாத நிலையில் இப்போது நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

அவர்கள் கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றிபெற்று பாராளுமன்ற பெரும்பான்மையை காண்பிப்பார்களாயின் அவர்களிடத்தில் ஆட்சியை ஒப்படைப்பதற்கு தயாராக உள்ளோம்.

ஆனால், அவர்கள் ஆட்சியைப் பொறுப்புஎடுப்பதற்குதயாரில்லை. நம்பிக்கையில்லா பிரேரணை மூலமாக அரசியல் இலாபம் அடைவதற்கே முயற்சிக்கின்றார்கள். ஆகவே அதற்கு முகங்கொடுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம். நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வோம் என்றார்.

## அடுத்த கட்ட நடவடிக்கை...

இந்தக் கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுமென சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான, முன்னாள் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேர தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும், ஐக்கிய மக்கள் சக்தியினால், முன்வைக்கப்படவுள்ள அரசாங்கத்துக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணைக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது குறித்து இதுவரையில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, பிவித்துரு ஹெல உருமய மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் 41 பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்றில் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக கடந்த 5ஆம் திகதி அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கடும் மழையுடன்...

இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு, ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

தென் மாகாணத்தில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40, 45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கடந்த சில தினங்களாக நீரேந்து பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் கடும் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த வாரங்களில் நீடித்த வரட்சியான காலநிலை காரணமாக நீர்மின் உற்பத்தி தடைப்பட்டு மின்வெட்டு அமுல்படுத்தப்படும் நிலையில் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த சில தினங்களாக பெய்த மழையைத் தொடர்ந்து முக்கிய நீர்த்தேக்கங்கள் பலவற்றில் நீர் மட்டம் 66 வீதமாக அதிகரித்துள்ளது.

நீர்த்தேக்கங்களின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் டி. அபேசிறிவர்தன் இதுதொடர்பாக தெரிவிக்கையில், தற்போதைய நீர் எதிர்வரும் சிறுபோக விவசாய நடவடிக்கைகளுக்கு போதுமானது என்றார். சில பகுதிகளில் நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## நம்பிக்கையில்லா தீர்மானம்...

எதிர்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்தன. ஆனால் பிரதமரின் பரிந்துரையின் பேரில், அந்நாட்டு ஜனாதிபதி, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தை கலைத்து உத்தரவிட்டார்.

இந்த விவகார தொடர்பான வழக்கு விசாரணையில் மீண்டும் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டது . அதன்படி, நேற்று நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடந்தது. வாக்கெடுப்பு தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகியோர் ராஜினாமா செய்தனர்.

எதிரணியினர் பதில் சபாநாயகர் ஒருவரை நியமித்து வாக்கெடுப்பை நடத்தினார்கள்.

நீண்ட இழுபறிக்கு பிறகு நள்ளிரவு 12.30 மணிபோல் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடந்தது. இதன் முடிவுகள் 1.30 மணிபோல் அறிவிக்கப்பட்டன.

அதன்படி, 342 பேர் கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 174 உறுப்பினர்கள் இம்ரான் கான் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவாக தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர். இதன்மூலம் ஆட்சியில் இருந்து இம்ரான் கான் வெளியேற்றப்பட்டார் .

பாகிஸ்தான் வரலாற்றில் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முதல் பிரதமர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.. நாட்டின் புதிய பிரதமர் யார் என்பது நாடாளுமன்றம் கூடும் போது முடிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் புதிய பிரதமராக பாகிஸ்தான் முஸ்லிம் லீக்நவாஸ் கட்சி தலைவர் ஷெபாஸ் ஷெரீப் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 2 வருடங்களின் பின்...

ஒரே பாடசாலையில் அதிகபட்ச காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு இவ்வாறு இடமாற்றம் வழங்கப்படுவதோடு கொவிட்19 பரவல் காரணமாக கடந்த காலங்களில் அந்த செயற்பாடு பாதிப்படைந்திருந்தது. எனினும் தற்போது இடமாற்றத்துக்கு விண்ணப்பிப்பதற்காக இணைய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுமார் 35,000 ஆசிரியர்களுக்கு இவ்வாறு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது. எவ்வாறாயினும், விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் குறித்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஆசிரியர் இடமாற்றம் தாமதடைந்துள்ளதோடு, எதிர்வரும் 18ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆசிரிய சங்கங்கள் கோருகின்றன.

## 6 மாத காலத்திற்கு...

பில்லியன் டொலரை மீளச் செலுத்த காலஅவகாசம் பெற முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த முழு முயற்சியும் கடினமானது எனவும் தற்போதைய நெருக்கடி நிலைமையின் விளைவுகளை புரிந்துகொண்டு இந்த முன்னெடுப்புகளை மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"எரிபொருள், எரிவாயு, மருந்து மற்றும் மின்சாரம் விநியோகம் என்பன வழமைக்கு திரும்புவதைக் காண்பதற்கே அரசாங்கம் முதல் முன்னுரிமை வழங்கும். இதன் மூலம் மக்களின் போராட்டத்திற்கு தீர்வு காண முடியும் என்றும் அமைச்சர் அலி சப்ரி கூறினார்.

18 ஆம் திகதி அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட குழுவினர் வொசிங்டனில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்த செல்ல உள்ளனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர்" முழு சர்வதேச நிதிச் சமூகத்திற்கும் நாம் தீவிரமாக இருக்கிறோம் என்ற நம்பிக்கையை காண்பிக்க வேண்டும் என்று அவர் கூறினார். ஆறு மாதங்களுக்குள் வரி மற்றும் எரிபொருள் விலைகளை உயர்த்தி நஷ்டத்தில் இயங்கும் அரசு நிறுவனங்களை மறுசீரமைக்க அரசு முயற்சிக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.இவை மிகவும் பிரபலமற்ற நடவடிக்கைகள் என்ற போதும் நாட்டை இன்றைய நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இவற்றை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள் கொள்வனவு செய்வதற்காகக இந்தியாவிடம் இருந்து மேலும் 500 மில்லியன் டாலர் கடனை இலங்கை கோர உள்ளதோடு இது சுமார் ஐந்து வாரங்களுக்கு போதுமானதாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் சீனா, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட பங்காளிகளின் ஆதரவையும் அரசாங்கம் எதிர்பார்ப்பதாக தெரிவித்த அவர், சில உதவிகளை எங்களால் பெற முடியும் என்று நம்புவதாகவும் அவர் கூறினார். இவர், கடந்த வாரம் நிதி அமைச்சர்பொறுப்பை ஏற்றது குறிப்பிடத்தக்கது.(பா)

## ஆர்ப்பாட்டங்கள்...

கடந்த வாரம் இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நாட்டின் நிலைவரம் குறித்து அவர்களிடம் விளக்கினார்.

தற்போது நாட்டுமக்கள் முகங்கொடுத்திருக்கும் மிகமோசமான நெருக்கடிகள் மற்றும் மின்விநியோகத்தடை, சமையல் எரிவாயு தட்டுப்பாடு, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கான பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக இந்த நெருக்கடிகள் மேலும் தீவிரமடைந்துள்ளமை குறித்து அரசாங்கம் அறிந்திருப்பதாக வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் எடுத்துரைத்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், மின்விநியோகம் துண்டிக்கப்படுவதன் காரணமாக பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டிருக்கும் எதிர்மறையான விளைவுகள் மக்களின் துன்பத்தை மேலும் அதிகப்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் மக்களால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் எதிர்ப்புப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் அந்த ஆற்றாமையின் விளைவு என்றும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையினால் அவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இராஜதந்திரிகளிடம் சுட்டிக்காட்டிய அமைச்சர் பீரிஸ், ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்வோரில் 80 – 85 சத வீதமானோர் அடிப்படைவாதிகளோ அல்லது அரசியல் ரீதியில் வலுவூட்டப்பட்டவர்களோ இல்லை என்றும் குறிப்பிட்டார். அதுமாத்திரமன்றி இலங்கை அரசியலமைப்பின் 14 ஆவது சரத்தின் பிரகாரம் ஒன்றுகூடுதல் மற்றும் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம் ஆகிய உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான பொதுமக்களின் உரிமை என்பது இலங்கையில் இயங்குநிலையில் ஜனநாயகம் உள்ளது என்பதற்கான ஒரு குறிகாட்டியாகும் என்றும் தெரிவித்தார்.



# தவக்கால சிந்தனை

## பாடுகளை நினைவு கூரும் இயேசு

கத்தோலிக்கத் திருச்சபை நேற்றைய தினம் பரிசுத்த வாரத்தின் ஆரம்பமாக குருத்தோலை ஞாயிறு தினத்தை அனுஷ்டித்தது. இந்த பரிசுத்த வாரத்தில் நாம் திருப்பாடுகளின் முக்கிய நிகழ்வுகளை சந்திக்கவிருக்கவிருக்கின்றோம்.

இன்றைய நற்செய்தி வாசகமானது

இயேசு பெத்தானியாவுக்கு சென்றமை அங்கு மறைந்த லாஸரை உயிர்த்தெழச் செய்தமை ஆகியவற்றை நினைவு படுத்துகிறது. அத்துடன் மார்த்தா மரியா சம்பந்தப்பட்ட நிகழ்வொன்றும் குறிப்பிடப்படுகிறது. இயேசுவோடு பந்தியில் அமர்ந்து இருந்தவர்களில் இலாசருவும் இருந்தார். மரியா கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை இயேசுவின் கால்களில் பூசி அதனை தனது கூந்தலால் துடைத்தார். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது. இயேசுவின் சீடருள் ஒருவரும் அவரைக் காட்டிக்கொடுக்க இருந்தவருமான யூதாஸ்காரியோத்து அந்த தைலத்தை 300 தெனாரியத்திற்கு விற்று அந்தப் பணத்தை ஏழைகளுக்குக் கொடுக்க கூடாதா என்று கேட்டான்□. அப்போது இயேசு மரியாவை தடுக்காதீர்கள்.அவர் என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும் ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கிறார்கள். ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப் போவதில்லை என்றார்...

உண்மையில் ஏழைகளின் மீது அன்பு இருந்தமைக் காக யூதாஸ் அவ்வாறு குறிப்பிடவில்லை. அவன் ஒரு திருடனாய் இருந்ததால் அவ்வாறு தெரிவித்தான்.

யூத சமூகத்தில் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை தலையில் எண்ணெய் தேய்த்து வரவேற்பது வழக்கம். ஆனால் மரியா நறுமணத்தைலத்தால் இயேசுவின் கால்களை கழுவுகிறார்.இச்செயல் இயேசுவின் வாழ்வில் வரவிருக்கின்ற முக்கியமான நிகழ்வுகளில் முன்னோட்டமாக அமைகிறது.

நல்ல சீடருக்குரிய முன்மாதிரியாக மரியா விளங்குகிறார். அதேபோன்று நாமும் இயேசுவின் சிறந்த சீடர்களாக எமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முயற்சிப்போம்.

இயேசு ஏழைகள் மீது அன்பு கூர்ந்தார். எனினும் மரியாள் தமது அடக்க நாளை முன்னிட்டு இவ்வாறு செய்வதாக அவர் வெளிப்படுத்துகின்றார். அன்பு, இரக்கம் மற்றும் மன்னிப்பு போன்ற பண்புகளை நாம் இந்தத் தவக்காலத்தில் அதிகமதிகமாக செயற்படுத்தி வருகின்றோம்.

பரிசுத்த வாரத்தில் புனித நாட்களை நாம் இறைவனின் திருவுளப்படி அனுஷ்டிப்பதற்கு இறையருள் வேண்டி செபிப்போம்.

எல்.செல்வா...

## தேவையான எரிபொருள்...

கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த மாதத்திற்காக இரண்டு இலட்சம் மெற்றிக் தொன் டீசலும் ஒரு லட்சத்து பத்தாயிரம் மெற்றிக் தொன் பெற்றோலும் தேவைப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

எரிபொருளுடனான கப்பல்கள் பல அடுத்த வாரம் நாட்டிற்கு வரவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க மேலும் தெரிவித்தார்.

## வெளிவரும்... (03ஆம் பக்கத் தொடர்)

(www.acju.lk) உத்தியோகபூர்வ சமூக ஊடகங்களிலும் வெளியிடப்படுகின்றன என்பதை சகலருக்கும் அறியத் தருகிறோம். எனவே ஜம்இய்யாவின் செய்திகளை அதனது உத்தியோகபூர்வ இணையதளத்திலும் உத்தியோகபூர்வ சமூக ஊடகங்களிலும் பார்வையிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் பொதுமக்களுக்கான ஜம்இய்யாவின் அறிவித்தல்கள் மற்றும் அறிக்கைகள் அனைத்தும் ஜம்இய்யாவின் உத்தியோகபூர்வ இணையதள இணைப்பு ஊடாகவே தற்போது பகிரப்பட்டு வருகின்றன என்பதையும் ஜம்இய்யாவின் உத்தியோகபூர்வ கடிதத் தாள்களில் (Letter Head) வெளியிடப்படுவதில்லை என்பதையும் அறியத்தருகின்றோம்.

இவ்வாறு அபாண்டங்களை பரப்பி, தவறான மற்றும் பாவமான செயல்களில் ஈடுபட்டு, மக்களுக்கு பிழையான செய்திகளை கொடுக்க முனைபவர்கள் அல்லாஹ்வை பயந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

'முஃமின்களே! ஃபாஸிக் (தீயவன்) எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால், அதைத் தீர்க்க விசாரித்துக் கொள்ளுங்கள்; (இல்லையேல்) அறியாமையினால் (குற்றமற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்து விடலாம்; பின்னர் நீங்கள் செய்தவை பற்றி நீங்களே கைசேதப்படுபவர்களாக (கவலைப்படுபவர்களாக) ஆவீர்கள்.' (49: 06)

ஆகவே, மேற்படி அல்குர்ஆன் வசனத்திற்கமைய வதந்திகளையும் உண்மைக்குப் புறம்பான செய்திகளையும் பரப்புவதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு ஜம்இய்யா சகலரையும் வேண்டிக் கொள்வதாகவும் பதில் பொதுச்செயலாளர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தமிழருக்கு மட்டுமல்ல... (03ஆம் பக்கத் தொடர்)

இந்திய மத்திய அரசு உதவ வேண்டும் எனவும கோரியிருந்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு நேற்று முன்தினம் (7) வெளியிட்ட செய்திக் குறிப்பில் "தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை, (7) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலை குறித்துப் பேசினார். அப்போது, இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குத் தற்போது நிலவும் தீவிரப் பொருளாதார நெருக்கடியில் சிக்கி, வேதனையில் தவித்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் குறித்து தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக்கொண்டார்.

இலங்கையில் வசிக்கும், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், தலைநகர் கொழும்பிலும் வசிக்கும் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் நலன் கருதி, தமிழக அரசு அத்தியாவசிப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகம் வாயிலாக அனுப்புவதற்குத் தயாராக உள்ளதாகவும், மனிதாபிமான நோக்கில் அனுப்பப்படும் இத்தகைய பொருட்களை உணவின்றித் தவிக்கும் தமிழர்களுக்கு கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் விநியோகிக்க உரிய அனுமதியையும், ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்றும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

இதுதொடர்பாக இந்தியப் பிரதமரை கடந்த (3132022) அன்று சந்தித்து, தான் முன்வைத்த கோரிக்கைகளை நினைவுகூர்ந்த முதல்வர், அந்தக் கோரிக்கைகளை எல்லாம் உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமென்றும் அப்போது கேட்டுக் கொண்டார்' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.இந்நிலையில், "இலங்கையில் அனைத்து இன மக்களும் ஒன்றுபடும் வேளையில் தமிழர்களுக்கு மாத்திரம் உதவிகளை வழங்குவது பிளவுகளை ஏற்படுத்திவிடக்கூடும், எனவே நாட்டுமக்கள் அனைவருக்கும் உதவிகளை வழங்குங்கள்" என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரியுள்ளது.

## ஒரு கோடி ரூபாய் ஐஸ்... (03ஆம் பக்கத் தொடர்)

வருகின்றன. இதனால் மத்திய, மாநில உளவுத்துறை பொலிஸார், கடலோர பாதுகாப்பு பொலிஸார், கடலோர காவல் படையினர் மற்றும் பொலிஸார் கண்காணிப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.இந்நிலையில் ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து சனிக்கிழமை (9) போதைப்பொருள் கடத்தப்பட இருப்பதாக ராமேஸ்வரம் குற்றப்பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து சனிக்கிழமை மாலை ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் சிறப்பு குற்றப்பிரிவு பொலிஸார் மறைந்திருந்தனர்.

அப்போது தங்கச்சிமடம் பெட்டேல் நகரை சேர்ந்த பிரைட்வின் என்பவருக்கு சொந்தமான மீன்பிடி விசைப் படகில் மீன் பிடிக்க செல்வது போல் மீனவர் ஒருவர் கைப்பை ஒன்றை படகில் ஏற்றிக் கொண்டு இருந்தார்.இதனை கண்ட குற்றப்பிரிவு பொலிசார் அவரை மடக்கி பிடித்து சோதனை செய்ததில் குறித்த பையில் கிறிஸ்டல் மெத்தம் பீட்டாமைன் என அழைக்கப்படும் ஐஸ் போதைப்பொருள் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து படகின் உரிமையாளர் பிரைட்வின் மற்றும் அக்காள் மடம் புயல் காப்பகம் பகுதியைச் சேர்ந்த டெஸ்மன் ஆகிய இருவரையும் கைது செய்த பொலிஸார் இந்த கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய முத்துப்பாண்டி என்பவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட கிறிஸ்டல் மெத்தம் பீட்டாமைன் என்ற ஐஸ் போதைப்பொருள் உண்மையானதா? என்பது குறித்து ராமநாதபுரத்தில் உள்ள தடவியல் பொலிஸார் ரசாயனம் மூலம் பரிசோதனை செய்து கிறிஸ்டல் மெத்தம் பீட்டபமைன் என்று உறுதிபடுத்தினர்.

ராமேஸ்வரம் பொலிஸாரால் கைபற்றப்பட்ட 957 கிராம் ஐஸ் போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு ஒரு கோடி ரூபாய் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான கடத்தல் போதைப்பொருள் பிடிபட்டதை அடுத்து கடலோர பகுதிகளிலும், இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லையிலும் பாதுகாப்பை பலப்படுத்தி உள்ளனர்.

## இன்றும் நாளையும்... (03ஆம் பக்கத் தொடர்)

எனினும், மக்களின் வசதி கருதி குறித்த தினங்களில் வங்கிகள் வழமை போன்று செயற்படும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாளையும் நாளை மறுதினமும் அரச விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளமை அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளை கொண்டு நடத்துவதற்கு தடையாக அமையக்கூடாது என்றும் அதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும் பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி மேலும் அறிவித்துள்ளார்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஏப்ரல் 11
திங்கட்கிழமை

# சிவஸ்ரீ ச. வேதாரணியக் குருக்கள் மறைவுக்கு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் இரங்கல்

ஈழத்திருநாட்டின் வடமராட்சி தம்பசிட்டி திருநாவலூர் முடிக் கொற்றாவத்தை அருள்மிகு சித்திவி நாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ச. வேதாரணியக் குருக்கள் 03.04.2022 அன்று எம்மை விட்டுப் பிரிந்தமை மிகுந்த வேதனையைத் தருகின்றது.

இவர் ஆதி சைவக்குருக்கள் பாரம்பரியத்தின் பிதாமகராவார். சிவாகம மரபுகளைப் பேணுவதை தனது உயிர்மூச்சாகக் கொண்டவர். சிவகாம மரபுகளை பல இளஞ் சைவ அர்ச்சகர்களிற்கு பயிற்றுவித்து பல சைவக்குருமாரை உருவாக்கி ஈழத்திருநாட்டிலும் வெளிநாட்டிலும் அவர்கள் சிவாகம கிரியைகளை முறைப்படி செய்ய வழிவகுத்தவர். நீர்வேலி கந்தசுவாமியார் ஆலய முன்னாள் பிரதமகுரு அமரர் சிவஸ்ரீ.சுவாமிநாத இராசேந்திரக்குருக்களால் மிகவும் மதிக்கப்பட்டவர்.

அவரோடு சேர்ந்து கந்தபுராணம் படித்தல் பயன்கூறுதல் ஆகியவற்றிலீடுபட்டு புராண படன மரபை முறையாகப் பேணி வந்தவர். அத்தோடு சோதிடம் சிற்ப சாஸ்திரத்தில் மிகுந்த ஆழமான அகலமான புலமையுடையவர், ஆலயங்களிலிருந்த அளவுப் பிழைகளை நீக்கி ஆலயங்கள் வளர்ச்சி பெறவழி செய்தவர், பல ஆலயங்களை மரபு மாறாது சிற்ப சாஸ்திரப்படி நிர்மாணித்துக் கொடுத்து அவை சிவாகமநெறி நிற்க நுட்பமாக வழிவகுத்தவர்.

பல வீடுகளை வாஸ்து சாஸ்திரப்படி அமைத்தும் திருத்திக் கொடுத்தும் பலர் சந்தோசமாக வீட்டில் வாழ வழி செய்தவர். தர்க்கம், இலக்கணம், சைவ சித்தாந்த சாஸ்திரம், அனுமாணப் பிரமாணம் இலக்கியம், வானவியல் , கணிதம், மெய்ஞானம் போன்ற எல்லாவற்றிலும் மிகுந்த வல்லமையுடையவர். பண்பானவர் அன்பானவர் யார் அணுகினால் தக்கவழி காட்டுபவர். தனது ஆலயத்தை திருப்பணி செய்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்தவர்.

இவ்வாறு பல்வேறு திறமையுடையவரை அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் எதிர்வரும் சைவப்புலவர் மாநாட்டில் சிவாகம பூஷணம் விருது வழங்கி கௌரவிப்பதாக கூட்டத்தில் தீர்மானித்திருந்த வேளை அவர் எம்மை விட்டுப்பிரிந்தமை தாங்க முடியாத வேதனையைத் தந்துள்ளது. இதனை எழுதும் போது எனது கண்கள் கண்ணீர் சொரிகிறது. மிகுந்த வேதனையைத் தருகிறது.

அன்னாரின் இழப்பு சைவத்தமிழ் உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். எமது குருநாதரின் பாதம் பணிந்து அவரிற்கு எமது இதய அஞ்சலிகளை சங்கத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னாரின் ஆன்மா தில்லைக்கூத்தனின் குஞ்சித திருப்பாதத்தில் கலந்து சிவசாயுச்சியம் அடையப் பிரார்த்திக்கின்றேன்.

சைவப்புலவர்
**சி.கா. கமலநாதன்,**
தலைவர்,
அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

# மின்வெட்டு, எரிசக்தி பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பல்கலைக்கழகங்களினதும் கடமை

## லிற்றில் சைகிட் வெளியீட்டில் லிற்றில் எய்ட் நிறுவன ஸ்தாபகர் ஜெயபாலன்



"நாடு எதிர்கொள்ளும் மின்வெட்டு மற்றும் எரிசக்தி பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பல்கலைக்கழகங்களினதும் கடமை" என லிற்றில் எய்ட் நிறுவன ஸ்தாபகர் த ஜெயபாலன் தெரிவித்தார். அவர் லிற்றில் சைகிட் கணித – விஞ்ஞான கல்வியூட்டும் அறிவியல் விளையாட்டுப் பொருளை அறிமுகப்படுத்தி உரையாற்றுகையில் தெரிவித்தார். இந்த அறிவியல் சார்ந்த விளையாட்டுப் பொருள் மாணவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது கிடைக்காத செய்கைமுறைப் பயிற்சியை வழங்குவதற்கான தீர்வாக அறிமுகப்படுத்துவதாகத் தெரிவித்த த ஜெயபாலன், இதே போல் நாட்டில் நிலவும் சிறிய பெரிய அளவிலான பிரச்சினைகளுக்கு: சமூகப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வு காண்பதற்கு அறிவியல் சமூகம் தன்னுடைய காத்திரமான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார். விஞ்ஞான கணிதத் துறையில் மணவர்களை ஈர்க்கும் லிற்றில் சைகிட் வெளியீடு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி லிற்றில் எய்ட் மையத்தில் நடைபெற்றது. இதன்போது அதனை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையிலேயே அவர் தெரிவித்தார். ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளரும் சமூக சேவகியுமான சுவர்ணா நவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ் சற்குணராஜா கானொலிப் பதிவினூடாகக் கலந்து லிற்றில் சைகிட் வெளியீட்டை உற்சாகப்படுத்தி சிறப்பித்தார். புதிய தொழில் முயற்சிகளுக்கும் ஆக்கச் செயற்பாடுகளுக்கும் பல்கலைக்கழகம் உறுதுணையாக நிற்கும்! என லிற்றில் சைகிட் வெளியீட்டில் பேராசிரியர் சற்குணராஜா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், லிற்றில் எய்ட் இன் முயற்சிகளைப் பாராட்டியதுடன் இவ்வாறான ஆதரவும் உந்து சக்தியும் மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தினார். பில் கேற்ஸ், ஸ்ரீவ் ஜொப்ஸ் கூட சிறிய அளவில் ஆரம்பித்தே பெரிதாக வளர்ந்தனர் எனத் தெரிவித்த பேராசிரியர் சற்குணராஜா கலைநீதனும் எதிர்காலத்தில் ஒரு சிறந்த தொழில்நுட்பவியலாளனாக வருவார் என நம்பிக்கை வெளியிட்டார். லிற்றில் சைகிட் போன்றவற்றின் அறிவியல் நோக்கை விதந்துரைத்த சுவர்ணா நவரட்ணம் இவ்வாறான முயற்சிகளை அடையாளம் கண்டு இலைமறை காயாக இருக்கும் திறைமைகளை வெளிக்கொணருத் லிற்றில் எய்ட் ஸ்தாபகரையும் லிற்றில் எய்ட் நிறுவனத்தையும் பாராட்டினார். லிற்றில் சைக்கிட்டை அதனை உருவாக்கிய கலைநீதனின் பெற்றோர் கையளிக்க கலாநிதி கதிர்காமநாதன் கலாநிதி கல்யாணி கதிர்காமநாதன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். லிற்றில் எய்ட் இன் முயற்சிகளைப் பாராட்டிப் பேசிய பேராசிரியர் அற்புதராஜா கலைநீதனின் ஆற்றல்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் மாணவர்கள் தங்கள் சிந்தனைகைளை சிதற வைத்துக்கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் செய்முறைக் கல்விக்கு இந்த விளையாட்டு உபகரணத்தை உருவாக்கி இருப்பது சிறப்பானது எனத் தெரிவித்தார்.





இந்நிகழ்வில் லிற்றில் சைகிட் டை உருவாக்கிய சைபோட் அக்கடமி 'அப் செயலி' ஒன்றையும் வெளியிட்டு வைத்தது. இச்செயலியை செய்ம்பிளொன் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைரமுத்து மிரளன் வெளியிட்டு வைத்தார்.

# இலங்கை தமிழரசு கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக இடைக்கால தடை

**ஓமந்தை விஷேட நிருபர்**

இலங்கை தமிழரசுக்கட்சி இளைஞர் அணி பொருளாளரும், மத்தியகுழு உறுப்பினருமான பீற்றர் இளம்செழியன் தம்மை கட்சியில் இருந்து இலங்கை தமிழரசு கட்சி பதில் செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம் நீக்கியது தவறு என யாழ். மாவட்ட நீதிமற்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார். அவரின் மனுவிற்கு ஆதரவாக சட்டத்தரணி கலாநிதி குருபரன் ஆஜராகியிருந்தார், பிரதிவாதிகளாக இலங்கை தமிழரசு கட்சி பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம், இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா, நிர்வாக செயலாளர் குலநாயகம் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்த மனுவை நேற்று முன்தினம் (08/04/2022) யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் கவனத்தில் எடுத்த நீதிபதி சசிதரன் இன்றில் இருந்து 14 நாட்களுக்கு எதிர்வரும் 22/04/2022) வரை பீற்றர் இளம்செழியனை கட்சியில் இருந்து நீக்கியமை இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளதுடன் 14, நாட்களுக்குள் அவரை கட்சியில் இருந்து நீக்கியமைக்கான விளக்கத்தை யாழ்பாண நீதிமன்றில் சமர்பிக்குமாறு கட்டளை பிறப்பித்துள்ளார்.



இது விடயமாக கருத்து தெரிவித்த பீற்றர் இளஞ்செழியன் தாம் இலங்கை தமிழரசு கட்சியின் ஆயுள்கால உறுப்பினராகவும், இலங்கை தமிழரசு கட்சியின் வாலிபர் முன்னணியின் இணை பொருளாளராகவும், இலங்கை தமிழரசு கட்சியின் மத்தியகுழு உறுப்பினராகவும் முல்லைத்தீவு மாவட்ட இலங்கை தமிழரசு கட்சி நிர்வாக உறுப்பினராகவும் பல வருடங்களாக இலங்கை தமிழரசுகட்சியின் வளர்ச்சிக்காக அற்பணிப்புடன் செயலாற்றும்போது தாம் எந்த தவறுகளும் கட்சியில் செய்யாதபோது என்னிடம் எந்த ஒரு விளக்கமும் கேட்காமல் கட்சியில் இருந்து நீக்கியமை கட்சி உபவிதிக்கு முரணான செயல் என்பதால் தாம் நீதிமன்றத்தை நாடியதாக கூறினார்.

# ஒடுக்கப்பட்ட தமிழர் விடுதலை கூட்டணி தலைதூக்கும்

## ஆனந்தசங்கரி

**கோப்பாய் குறூப் நிருபர்**



இருபது ஆண்டுகளாக நேர்மையாக நியாயமான அடிப்படையில் செயற்பட்டு வந்தாலும் அடங்கி ஒடுங்கியிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி மீண்டும் தலைதூக்கப் போகின்றது என்று அக்கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே வீ.ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மக்கள் மீண்டும் ஆதரவு தரவேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு கூடி தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் என்றார்.

# எரிபொருளுக்கு காத்திருந்தவர் பாரவூர்தி மோதி பலி

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் எரிபொருளுக்காக காத்திருந்த முதியவர் பாரவூர்தி மோதி உயிரிழந்துள்ளார்.அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கனகரட்ணம் (வயது72) என்ற முதியவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் அச்சுவேலி தெல்லிப்பழை வீதியில் இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் நிரப்புவதற்காகச் சென்ற பாரவூர்தி வரிசையில் நின்று செல்லும் போது, முன்னால் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவரை மோதித்தள்ளியது. அதன் போது, முதியவர் பாரவூர்தியின் சக்கரத்திற்குள் சிக்கி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் 1200 குடும்பங்களுக்கு இடர் கால நிவாரண உதவி





**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு இடர் கால நிவாரணம் கடந்த சனிக்கிழமை (09) மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களிலும் முதல் கட்டமாக 1200 குடும்பங்கள் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இடர் கால நிவாரண உதவியாக சுமார் 3500 ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொருட்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அதிகாரி மற்றும் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே.யாட்சன் பிகிறாடோ மற்றும் குறித்த நிறுவனத்தின் பணியாளர்கள் இணைந்து அத்தியாவசிய உலர் உணவு பொருட்களை வழங்கி வைத்தனர்.

இதன் போது மன்னார்,நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 100 குடும்பங்களுக்கு குறித்த உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'சுபகிருது' புத்தாண்டில் நிறைந்துள்ள நற்செய்கைகள்

தமிழ் வருடங்கள் 60ல் சுபகிருது 36வது ஆண்டாக அமைந்துள்ளது. சுபகிருது என்பதற்கு நற்செய்கை என்று தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். அந்த அளவில் இந்த ஆண்டு பல்வேறு நற்செய்திகளைக் கொண்டுவரும் ஆண்டாக அமையும்.

சுபகிருது வருடத்தில் நாடெங்கும் நல்ல மழை பெய்யும் சுபிட்சமாக விளங்கும் என தமிழ் பஞ்சாங்கம் கணித்துள்ளது. நல்ல விளைச்சல் உண்டாகும்.

கேடு எவருக்கும் வராது மக்கள் சுகமாக வாழ்வர் எனவும் தமிழ் பஞ்சாங்கத்தில் கணிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக நோய்களின் பிடியில் சிக்கித்தவித்த மக்கள் இந்த ஆண்டு நிம்மதி பெருமூச்சு விடலாம்.

மங்களகரமான 'சுபகிருது புத்தாண்டு, 14.4.22 வியாழக்கிழமை அன்று பிறக்கிறது. குரு வாரத்தில், குரு பகவான் தன் சொந்த வீடான மீன ராசியில் இருக்கும் நேரத்தில் பிறக்கும் இந்தப் புத்தாண்டு பல்வேறு நன்மைகள் தரப்போகிறது.



## சைவ மஞ்சரி

## சித்திரை புத்தாண்டு சுபகிருது வருஷப் பிறப்பு

வாக்கிய பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை 01ஆம் திகதி (14.04. 2022) வியாழகிழமை காலை 7.50 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது. திருக்கணித பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை 01ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை காலை 8.41 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது.

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம்**

நல்ல சிவப்பு அல்லது மஞ்சள் நிற பட்டாடை அல்லது சிவப்பு கரை அமைந்த புதிய பட்டாடை அணிவது நல்லது.

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம்**

மஞ்சள் நிற பட்டு அல்லது மஞ்சள் கரை கொண்ட வெள்ளை வஸ்திரம்.

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி ஆபரணம்**

பவளம்,புஸ்பராகம் கொண்ட ஆபரணம்.

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஆபரணம்**

புஸ்பராகம் கொண்ட ஆபரணம்.

**தோஷ நட்சத்திரம்**

பரணி, மகம், பூரம் ,உத்தரம் 1ஆம் பாதம், பூராடம், உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம்,திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட சுப நேரம்**

சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை பகல் 7.57 முதல் 8.47 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15 .04.2022) வெள்ளிக்கிழமை பகல் 7.52 முதல் 9.51 வரை சித்திரை 2 ஆம் திகதி (15.04.2022) வெள்ளிக்கிழமை இரவு 6.12 முதல் 8.12 வரை

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட சுப நேரம்**

சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை பகல் 8.50 முதல் 9.42 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15.04.2022) வெள்ளிக்கிழமை பகல் 8.35 முதல் 9.50 வரை

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விஷ_ புண்ணிய காலம்**

14.04.2022 அதிகாலை 3.50 மணி முதல் முற்பகல் 11.50 மணி வரை

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷ_ புண்ணிய காலம்**

14.04.2022 அதிகாலை 4.41 இல் இருந்து பகல் 12.41 வரை

**மருத்து நீர்**

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கடம்ப இலையும் காலில் கொன்றை இலையும் வைத்து ஸ்நானஞ் செய்ய வேண்டும். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கொன்றை இலையும் காலில் புங்கம் இலையும் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

## மானுடவியல்
(தொடர்)

### சிவகோசரியார்



68

சிவகோசரியார் வருதற்கு முன்னே வேட்டையாடுதற்குச் சென்ற திண்ணனார் வேட்டையாடி, இறைச்சியும் திருமஞ்சனமும் புஷ்பமும் முன்போல அமைத்துக் கொண்டு அதிசீக்கிரந் திரும்பினார்.

திண்ணன் மற்றும் சிவகோசரையும் ஒன்று சேர்த்தாயிற்று;

திண்ணன் ஆகிய கண்ணப்பர் ஈசன் காளத்திநாதனை அடைந்தது மாமிசம் வைத்து பூஜைகள் செய்தார் இதை தினமும் பூஜைகள் செய்யும் சிவகோசரியாருடைய மனதை துயரம்படுத்தியது.

திருக்காளத்தியப்பர் அந்தச் சிவகோசரியாருடைய மனத்துயரத்தை நீக்கும்பொருட்டு ஐந்தாநாள் இராத்திரியில் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, பிறபக்கத்திலே ஒளித்திருந்து நடப்பதை பார்க்க கட்டளை பிறப்பித்தார். சிவகோசரும் நடப்பவைகளை மரத்தின் பின்புறம் ஒளிந்திருந்து கவனித்தார்.

திண்ணன் திரும்பி வரும்பொழுது, பலபல துர்ச்சகுனங்களைக்கண்டு, "இந்தச் சகுனங்களெல்லாம் உதிரங் காட்டுகின்றன. ஆ கெட்டேன்! என்கண்மணிபோன்ற சுவாமிக்கு என்ன அபாயம் சம்பவித்ததோ! அறியேனே" என்று மனங்கலங்கி, அதிசீக்கிரம் நடந்தார்.

அடியார்களுடைய பத்தி வலையில் அகப்படுகின்ற அருட்கடலாகிய பரமசிவன் திண்ணனாருடைய அன்பு முழுதையும் சிவகோசரியாருக்குக் காட்டும் பொருட்டுத் திருவுளங்கொண்டு, தம்முடைய வலக்கண்ணினின்றும் இரத்தம் சொரியப்பண்ணினார்.

திண்ணனார் தூரத்திலே கண்டு விரைந்தோடி வந்தார் வந்தவுடனே, இரத்தஞ் சொரிதலைக் கண்டார். காண்டலும், வாயிலுள்ள திருமஞ்சனம் சிந்த, கையில் இருந்த இறைச்சி சிதற, அம்பும் வில்லும் விழ, தலைமயிரிலே செருகப்பட்ட புஷ்பங்கள் அலைந்து சோர, ஆட்டுகின்ற கயிறு அற்றபொழுது வீழ்கின்ற நாடகப் பாவைபோலச் சீக்கிரம் பதைபதைத்து நிலத்திலே விழுந்தார்.

விழுந்தவர் எழுந்து போய், இரத்தத்தைப் பலமுறை கையினாலே துடைக்க; அது காலுதல் தவிராமையைக் கண்டு, அதற்கு இன்னது செய்வோம் என்று அறியாதவராகி, பெருமூச்செறிந்து, திரும்பிப்போய் விழுந்தார்.

நெடும்பொழுது உள்ளுயிர்த்தமின்றி இறந்தவர்கள் போலக் கிடந்தார், பின் ஒருவாறு தெளிந்து, "இப்படிச் செய்தவர்கள் யாவர்" என்று சொல்லிக்கொண்டு எழுந்தார்.

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**18973) நவக்கிரகங்களில் முழுமையான சுப கிரகமாக திகழ்பவர் யார்?**
குரு பகவான்.

**18974) இவர் எப்படி பட்டவர்?**
இவர் மனித வாழ்விற்குத் தேவையான அனைத்து விதமான செல்வங்களையும் தருபவர்.

**18975) இவருக்குரிய சிறப்பு என்ன?**
இவர் மனித வாழ்விற்கு தேவையான அனைத்து விதமான செல்வங்களையும் தருபவர் என்பதால், எந்த கிரகத்திற்கும் இல்லாத தனிச் சிறப்பு குருவிற்கும், குருவின் பார்வைக்கும் உண்டு.

**18976) இவரைப்பற்றி ஜோதிட சாஸ்திரம் என்ன சொல்லுகிறது?** 'குரு பார்க்க கோடி நன்மை' என்று கூறுகிறது.

**18977) குரு இருக்கும் இடத்தை வைத்து ஒரு ஜாதகத்தில் குழந்தைகளின் நிலையை அறியமுடியும் என்பதால், இவரை என்னவென்று அழைப்பார்கள்?** 'புத்திர காரகன்'

**18978) மனிதனின் அனைத்து தேவைகளையும் நிறைவு செய்யும் பணத்திற்கு அதிபதி என்பதால் இவரை என்னவென்று அழைப்பார்கள்?** 'தன காரகன்'

**18979) குருவை வேறு எவ்வாறு அழைப்பார்கள்?** 'ஜீவன காரகன்'

## சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம் சமய சமூகத் தொண்டர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

ஆன்மீகம் மற்றும் மானிட மேம்பாட்டுடன் தொடர்புடைய அறிவை மேம்படுத்தி அவ் அறிவைப் பெற்றவர்களைப் பயன்படுத்தி சமூகத்தில் ஆன்மீகம் மற்றும் மானிட மேம்பாட்டுடன் தொடர்புடைய வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக நான்கு நாட்கள் வதிவிடப் பயிற்சி நெறியோன்று தொண்டைமானாற்றில் அமைந்துள்ள செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்படவுள்ளது. அப் பயிற்சி நெறி தொடர்பான சில முக்கிய விபரங்கள் வருமாறு.

18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இலங்கையின் எல்லாப் பாகத்திலிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்படும். பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைவரும் சமய தீட்சை பெறுவதற்கும் பயிற்சி வேளையில் வழங்கப்படும். தீட்சை பெற்ற அன்றிலிருந்து தொடர்ந்து 21 நாட்களுக்கு சைவ உணவு மட்டுமே அருந்துவதற்கும் உறுதி கொண்டவர்களாயிருத்தல் வேண்டும். சைவ நெறிமுறையுடனான வாழ்விற்கான பலவிதமான செய்முறை போதனைகளும் அடிப்படை யோகாசனப் பயிற்சிகளும் போதிக்கப்படும். பயிற்சி 2022.04.15 ஆம் திகதி அதிகாலை 06 மணிக்கு ஆரம்பமாகும். தூர இடத்திலிருந்து வருபவர்கள் 14 ஆம் திகதி இரவு 8 மணிக்குள் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வரவேண்டும்.

தங்குமிடமும் உணவும் பயிற்சியும் இலவசமாக வழங்கப்படும். இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ரூபா 15 முத்திரை ஒட்டிய சுய முகவரியிட்ட நீட்டு தபால் உறையையும் இணைத்து வேண்டுகோள் கடிதத்தை சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம், 48, புனித மரியாள் வீதி, திருக்கோணமலை எனும் முகவரிக்கு அனுப்பினால் அவருக்கு விண்ணப்பப் படிவம் அனுப்பப்படும். உங்கள் வேண்டுகோளில் உங்கள் தொலை பேசி இலக்கத்தை எழுத வேண்டும். பயிற்சியை நிறைவு செய்து சான்றிதழ் பெறுபவர்கள் சமயம், சமூகம் சார்ந்த தொண்டுச் செயற்பாடுகளில் தத்தம் மாவட்டங்களில் ஈடுபடலாம். பயிற்சியில் கலந்து கொள்பவர்கள் யாழ் குடா நாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கு தல யாத்திரைக்காக அழைத்துச் செல்லப்படுவார்கள்.

தல யாத்திரை உட்பட பயிற்சி செயற்பாட்டிக்குரிய நாட்கள் மொத்தம் 04 ஆகும். மேலதிக விபரம் அறிய வேண்டுமாயின் 0703139591 எனும் தொ.பேசியுடன் தொடர்பு கொள்ளலாம்.

இத் தகவலை அனைவரும் தமது நண்பர்கள் உறவினர்களுக்கும் தெரிவித்து பயிற்சியில் கலந்து கொள்ள ஊக்குவிக்கும்படி சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டாளர்கள் வேண்டுகின்றனர்.

## நாதப் பிரம்ம யோகம் - 14



இந்திய யோகிகளும் சித்தர்களும் இசையின் ஸ்தூல சூக்ஷ்ம நன்மைகளைக் கண்டறிந்து இசையினால் பெறக்கூடிய சித்திகள், நன்மைகளைத் தொகுத்து வேதமாக்கி இருக்கிறார்கள். இந்த வேதத்தினை சாமவேதம் என்று கூறுகிறோம். இந்த சாம வேதம் இசையினது எல்லையற்ற இரகசிய ஆற்றலினைப் பற்றியும், இதைப் பயிற்சிப்பதால் ஒரு சாதாரண மனிதன் தனது அக ஆற்றல்களை, தெய்வ சக்தியை விழிப்பித்து அதீத சக்தியுடைய மனிதனாக மாறமுடியும் என்பதைப் பற்றியும் கூறுகிறது.

இசையின் நன்மைகளை பற்றிய ஆய்வுகள் தேடல்கள் என்பவை இந்த நவீன லௌகீக உலக வாழ்க்கையிலும் உத்வேகம் குறையமல் ஆராயப்பட்டே வருகிறது. இசை பற்றிய அறிவியல் ஆய்வுகள் மற்றைய அறிவியல் துறைகளில் இருப்பதைப் போலவே முறைப்படிஅறிவியலால் ஆராயப்படுகிறது. பல ஆராய்ச்சிகள் புலன் வழி சென்று துன்பமுறுகிற மனதிற்கு அகத்தின் வழி சென்று நிம்மதி அனுபவிக்க இசை பெருந்துணை புரிகிறது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இசை என்பது உண்மை அன்பிற்கு சமமான ஒன்றாக கூறப்பட்டிருக்கிறது. இந்த இரண்டும் புத்தாக்கத்தைத் தரும் சக்திகள். இரண்டும் உயிர் வாழ்க்கையின் ஜடம், சேதனம் ஆகிய இரண்டையும் தாக்கி இன்பத்தைத் தரக்கூடியது.

இசை அகத்தினை தூண்ட ஒரு நல்ல சாதனம். அதனால் இசையை தகுந்த இசைக் கருவி ஒன்றின் உதவியுடன் நாம் பாடவேண்டும் என்று தத்துவஞானியும், கணிதவியலாளருமான பைதகரஸ் கூறுகிறார்.

Dr. MCFadenvd என்பவர் இசைக் கருவிகளைவிட குரலிசை மிக உயர்ந்த ஒன்றாக கூறுகிறார். Dr. MCFadenvd இனது ஆய்வு ஸ்தூல உடலின் ஆரோக்கியத்தினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பைதகரஸின் கருத்து மன ஆந்தத்தை அடிப்படையாக கொண்டது.

ஆன்மாவினைஅடிப்படையாகக் கொண்டு மகாகவி ரவீந்திரநாத் தாகூர் கூறுகிறார் ' வாழ்க்கை தெய்வீக அழகுடன் மிளிர வேண்டும் என்றால் அது இசையாலே மாத்திரம் தான் சாத்தியம்' என்றார். ருஷ்டின் என்பார்அகவிழிப்பிற்கு, ஆளுமை விருத்திக்கு, கலை விருத்திக்கு, புத்தாக்க உணர்விற்கு இசை ஒருஅரிய சாதனம் என்று கூறியுள்ளார்.

இத்தகைய பல்வேறு கருத்துக்கள் அவர்களது தனிப்பட்ட அனுபவம் சார்ந்தது. இவை அனைத்தையும் தொகுத்து இசைபற்றிய ஒரு முடிவை நாம் சிந்திப்போமாக இருந்தால் இசை என்பது இயற்கையாக உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றும் வளர்வதற்குரிய அத்தியாவசிய கூறு என்பது பெறப்படுகிறது. இதனாலேயே புராதன ரிஷிகள் சங்கீத சாஸ்திரத்திற்கு மிக உயர்ந்த முக்கியத்துவத்தைக் கொடுத்தார்கள்.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் சிவதீட்சை வழங்கல்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் எதிர்வரும் 17ஆம் திகதி காலை 6.30 மணி தொடக்கம் பார்வதி பரமேஸ்வரன், சிவாக்கினி திருமுன்னிலையில் சிவதீட்சை (பிரவேச தீட்சை) வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. இச் சிவப்புண்ணிய கைங்கரியத்தில் எல்லோரும் ஆசார சீலர்களாக விரதமிருந்து பங்குபற்றி சிவதீட்சை பெற்று சைவசமயத்தின் இலட்சியங்களை அடைவதற்கு வருமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இல. 18, குமாரசாமி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணத்தில் (யாழ் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக) உள்ள ஸ்ரீ சிவகுருநாதகுரு பீடம், வேதாந்த மடத்தில் சிவதீட்சை வழங்கல் இடம் பெறும்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சி.கா.கமலநாதன் தலைமையில் ஸ்ரீசிவகுருநாத குருபீடத்தின் எட்டாவது குருபீடாதிபதி ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலையில் தீட்சாகுரு சிவஸ்ரீ. கு. வீரசிங்கக்குருக்கள் தீட்சைகளை வழங்குவார்.

இந்நிகழ்வில், சமாதிலிங்கங்களிற்கான விசேட பூசை, திருமுறைப் பாராயணம், யாக பூசை, சிவதீட்சை வழங்குதல், குருதட்சணை வழங்கி தீட்சாகுருவின் ஆசீர்வாதம் பெறுதல், ஸ்ரீசிவகுருநாத குருபீடாதிபதியின் ஆசியுரை, தலைமையுரை, சான்றிதழ் வழங்குதல் என்பன இடம்பெறும்.

சைவப்புலவர் திருமதி கவிதா கதிரமலை சைவ பிரசார செயலாளர் நன்றியுரை ஆற்றுவார்.







கொழும்பு - 14 கிராண்ட்பாஸ் பபாபுள்ளே அருள்மிகு ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் பத்தாவது வருடாந்த இரதபவனியின் இடம் பெற்ற காட்சிகளை படங்களில் காணலாம். (படங்கள்: வட கொழும்பு தினகரன் நிருபர்)

# கிழக்கின் குரல்



### அம்பாறை கரையோரப் பிரதேசங்களில்

# டெங்கு நோய் பரவும் அபாயம்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் மிகவும் முன் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட பொலிவேரியன் வீட்டுத் திட்ட கிராமம் மற்றும் கடற்கரையோரப் பிரதேசம் என்பவற்றில் அதிகளவிலான நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அதனை கட்டுப்படுத்த பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது திடீரென மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இடைவிட்ட மழை டெங்கு நுளம்பு பெருகுவதற்கு சாதகமான சூழலை தோற்றுவிக்கக் கூடும் என்ற காரணத்தினால் பிரதேச மக்கள் தங்களது வீடு மற்றும் சுற்றுப்புற சூழல் , நீர் தேங்கி நிற்கும் பொருட்கள் , நீர் தேங்கும் இடங்கள், கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தோணி , படகு போன்ற இடங்கள் குறித்து அவதானத்துடன் தொழிற்படுமாறும் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை மக்கள் வசிக்கும் குடியிருப்பு பிரதேசங்களில் உள்ள வடிகான்களில் நீண்ட காலத்திற்கு கழிவு நீர் தேங்கியுள்ளதாகவும் இது குறித்து கல்முனை மாநகரசபையின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

### கல்முனையில் போராட்டம்:

# ஆராதனையை தொடர்ந்து வீதியில் இறங்கிய கிறிஸ்தவ மக்கள்



நாட்டின் பெருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்து மக்களின் வாழ்வாதாரம், அன்றாட ஜீவனோபாயம் கஷ்டத்திற்குள்ளான நிலையில் தற்போதிருக்கும் அரசுக்கு எதிராக நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக கல்முனை இருதயநாதர் ஆலயத்தின் முன்னால் மின்சார தடை மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு, விலை ஏற்றம் போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கிறிஸ்தவ மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கையுடன் இடம்பெற்ற இப்போராட்டமானது கல்முனை இருதயநாதர் ஆலய பங்குத்தந்தை அருளானந்தன் தேவதாஸன் தலைமையில் இடம்பெற்றது. நூற்றுக்கு மேற்பட்ட கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டு அரசுக்கு எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## மண்முனை அருள்மிகு ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த உற்சவம்

**ஆரையம்பதி தினகரன் நிருபர்**

மண்முனை அருள்மிகு ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த சடங்கு உற்சவம் இன்று இரவு திருக்கதவு திறத்தல் வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து இடம்பெறும் ஏழு சடங்குகள் அனைத்தும் பக்தி மிகு விசேட பூஜையுடன் இடம் பெறுவதுடன் 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 4 மணிக்கு பள்ளளயச் சடங்கு அப்பனுக்கு நடைபெற்று தேவாதிகள் அடியார்கள் மஞ்சள் பூசி எம்பெருமானின் தீர்த்தக்குளத்தில் நீராடி பத்திமிகு தீ மிதித்தல் இடம்பெற்று கும்பம் சொரிதலுடன் சடங்கு இனிதே நிறைவுபெறும். சடங்கு உற்சவ நிகழ்வுகள் அனைத்தும் ஆலய பிரதம குரு இளஞ்சுடர் க. ரமேஷ் தலைமையில் இடம்பெறும்.

# கண்கெட்டபின் ஞானம் வந்தது போன்று சஜித் பிரேமதாச பேசுகிறார்

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமாயின் ஆட்சி பொறுப்பை ஏற்க தான் தயாராக இருப்பதாகவும், அவ்வாறு ஆட்சி பொறுப்பை ஏற்க வேண்டுமெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை முழுமையாக நீக்கப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சொல்லியிருப்பது 'வேலைக்கள்ளிக்கு பிள்ளைச்சாட்டு' போன்றதாகும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் கலாபூஷணம் முபாறக் அப்துல் மஜீத் சாடியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சஜித் பிரேமதாசவும் அமைச்சராக இருந்த அரசாங்கமே கடந்த அரசாக இருந்தது. ஆரம்பத்தில் மைத்திரி தலைமையிலான கட்சியும் இணைந்த தேசிய அரசாங்கம் இருந்த போது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு அதிகாரம் இருந்தது. இந்த அதிகாரத்தை பயன்படுத்தி 19வது சட்டத்தை கொண்டுவந்தவர்களால், உள்ளூராட்சி தேர்தலில் தோல்வியுற்ற பெண்களையும் வலுக்கட்டாயமாக சபைக்கு அனுப்ப வேண்டும் என்ற ஜனநாயகத்துக்கு முரணான சட்டத்தை கொண்டு வந்தவர்களால் ஏன் நிறைவேற்று அதிகாரத்தை நீக்க முடியவில்லை?



ஆகக்குறைந்தது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான பிரேரணை ஒன்றையாவது பாராளுமன்றத்தில் முன் வைத்திருக்கலாம். அவற்றை செய்யாது இப்போது கண்கெட்டபின் ஞானம் வந்தது போன்று சஜித் பிரேமதாச பேசுகிறார். இன்றைய நெருக்கடியை தீர்ப்பதற்கான ஆற்றல் இருக்குமாயின் சஜித் பிரேமதாச கட்சியினர் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அரசை பாரமெடுத்து நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பிக் காட்டினால், டொலர், டீசல் தட்டுப்பாட்டை நீக்கி காட்டினால் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கவும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கும் நிலை வரும்.

# எரிபொருள் பற்றாக்குறையால் அம்பாறையில் கடற்றொழில் பாதிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, மட்டுப்படுத்தப்பட்ட கல்முனை கரையோர மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எம்.ஜீ.எம். பகுர்தீன் தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடற்றொழிலாளர்கள் தனது தொழிலை மேற்கொள்வதற்கு மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல் என்பவற்றை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கொள்கலனில் எரிபொருள் விநியோகிப்பது சில எரிபொருள் நிலையங்களில் இடைநிறுத்தப்பட்டு கொள்கலன்களில் பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன விநியோகிக்காததனால் மீனவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மீனவர்களுக்கு கொள்கலன்களிலேயே பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன வழங்க வேண்டுமென தெரிவித்தார்.

ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்கு எரிபொருள் வழங்கப்படுவதைப் போன்று மீனவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கல்முனைப் பிராந்திய கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.



தமனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு அரச கருமமொழி திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற இரண்டாம் மொழி பாடநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான நிறைவு விழா (05) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இப்பாடநெறியின் சிரேஷ்ட போதனாசிரியரும் மொழித்திணைக்கள பரீட்சகருமான ஏ.எல். உதுமாலெப்பையுடன் பாடநெறியை பூர்த்தி செய்தோர் இணைந்து எடுத்துக்கொண்ட படம்.

# நிரந்தர கட்டடமின்மையால் அக்கரைப்பற்றிலிருந்து மாற்றப்படும் அரசாங்க அலுவலகம்

**அக்கரைப்பற்று வடக்கு நிருபர்**

அக்கரைப்பற்று மாநகரில் 2010ஆம் ஆண்டிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப்பணியக அம்பாறை மாவட்ட அலுவலகம் இதுவரை வாடகை கட்டடத்திலயே இயங்கி வருகிறது.

இதற்குரிய நிரந்தர கட்டடம் ஒன்றை பெறுவதற்காக அரசியல்வாதிகள் தொடக்கம் அரச உயரதிகாரிகள் வரை சென்று பல முயற்சிகள் மேற்கொண்டும் இதுவரை அது பலனளிக்கவில்லை என்று இக்காரியாலயத்தில் பணி புரியும் உத்தியோகத்தர் நஸீம் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

நிரந்தர கட்டடம் இன்மையால் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து அக்கரைப்பற்றில் இருந்து அம்பாரைக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வேளையில், இப்பிரதேச சிறார்களின் பாலர் பாடசாலை கல்வி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் நல்நோக்கில் இக்காரியாலயத்தை கொண்டு செல்லாமல் தடுப்பதற்காக இப்பிரதேசத்தில் நிரந்தர கட்டடம் ஒன்றை உடனடியாக ஒதுக்கி தருமாறு அரசியல்வாதிகள் மற்றும் தனவந்தர்களிடம் இவர்கள் வினயமாக கேட்டுக் கொள்கின்றார்கள்.

# புதுவருடப்பிறப்பை முன்னிட்டு பாரம்பரிய புத்தாண்டு சந்தை

**மட்டக்களப்பு விசேட நிருபர்**

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு மண்முனை வடக்கு பிரதேச செயலகமும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடாத்திய சமுர்த்தி அபிமான 2022 பாரம்பரிய புத்தாண்டு சந்தை கல்லடி பழைய பாலத்தின் அருகில் நேற்று முனதினம் (09) ஆரம்பித்து வைக்கப்பட்டது.



மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந் மற்றும் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு சந்தையை திறந்து வைத்து விற்பனையை ஆரம்பித்து வைத்தனர்.

புளியந்தீவு, கல்லடி, இருதயபுரம் மற்றும் இருதயபுரம் கிழக்கு ஆகிய சமுர்த்தி வலயங்களைச் சேர்ந்த 48 கிராம சேவகர் பிரிவிலும் உள்ள சுயதொழில் முயற்சியாளர்கள் தங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்தி விற்பனை செய்தனர்.



புனித ரமழானை சிறப்பிக்கும் முகமாக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வின் போது,.. (படங்கள்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

# கிழக்கு மாகாணத்தில் இரு உயிரியல் மருத்துவ பொறியியலாளர்கள் நியமனம்

**நிந்தவூர் குறூப் நிருபர்**

கிழக்கு மாகாணத்தில், முதற் தடவையாக இரு உயிரியல் மருத்துவ பொறியியலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் இந்நியமனங்களை வழங்கினார். புதிதாக நியமிக்கப்பட்ட உயிரியல் மருத்துவ பொறியியலாளர்களில் ஒருவர் திருகோணமலை மாவட்டத்தற்கும், மற்றுமொருவர் அம்பாரை மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

# திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமனம்

**கிண்ணியா மத்திய நிருபர்**



திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் எஸ்.பார்த்தீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

2015ம் ஆண்டு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை நிருவாக சேவைக்கு இணைக்கப்பட்ட இவர் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் உதவிச் செயலாளராக கடமையாற்றி வந்தவேளை இந்நியமனம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவர் இந்நியமனத்திற்கு மேலதிகமாக கிழக்கு மாகாண கூட்டுறவு பிரதி ஆணையாளராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கேஸ் வழங்கக் கோரி கொட்டும் மழையிலும் ஆர்ப்பாட்டம்

**றொட்டவெவ குறூப் நிருபர்**



திருகோணமலை தபால் அலுவலகத்திற்கு முன்னால் பிரதான வீதியை மறித்து எரிவாயு வழங்குமாறு கோரி கொட்டும் மழையில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் எரிவாயு வழங்கப்படும் என கடை உரிமையாளர் கூறியதை அடுத்து மக்கள் நீண்ட வரிசையில் நின்றதாகவும் நேற்று முன்தினம் மாலை வரை எரிவாயு கிடைக்கவில்லை எனவும் மக்கள் தெரிவித்து பிரதான வீதியில் கேஸ் சிலிண்டர்களை வைத்துக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# நகர்வலம்






## ஸேம் ரிபாய் பாடசாலை அதிபர் நழ்ரி காலமானார்



பேருவளை மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) அதிபரும், தர்கா நகர் அல்ஹம்ரா மகா வித்தியாலய முன்னாள் அதிபருமான மொஹமட் நழ்ரி (வயது 53) காலமானார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், தர்கா நகர் ஸாஹிரா தேசிய பாடசாலை ஆசிரியை ஹஸீராவின் கணவருமாவார். அன்னாரின் ஜனாஸா நேற்று (10) ளுஹர் தொழுகையின் பின் தர்கா நகர் தெருவுப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், அரசியல் பிரமுகர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

பலாங்கொடை பிரதேசத்தில்;

## எலிக்காய்ச்சல் பரவி வரும் வீதம் அதிகரித்து வருகிறது

### சுகாதார வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை நகரம் பலாங்கொடை பிரதேச சபை, இம்புல்பே பிரதேச சபை பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரித்து வருவதாக பிரதேச சுகாதார வைத்திய காரியாலய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இந்நோய் பரவும் ஆபத்துக்கள் குறித்து துண்டுப் பிரசுரங்கள் மற்றும் தகவல் குறிப்புக்கள் மூலமும் சுகாதார தரப்பு காரியாலயங்கள் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றன. வயல்வெளிகள், தோட்டங்கள், இரத்தினக்கல் அகழ்வு, கூலித் தொழிலாளிகள், சுத்திகரிப்பு ஊழியர்கள், கழிவறை தொழிலாளிகள், எலிக்காய்ச்சல் துரிதமாக பரவி வருவதால் இத்துறைகளில் ஈடுபட்டுள்ளோர் சுகாதார தரப்புக்களின் அறிவுரைகளை பின்பற்றுமாறு சுகாதார வைத்திய காரியாலய அதிகாரிகள் தெரிவிக் கின்றனர்.

அதனால் இத்துறைகளில் பணி புரிபவர்கள் பிரதேச அரச வைத்தியசா லைகள் பொது சுகாதார காரியாலயங்கள் வைத்திய அதிகாரிகள் கா ரியாலயங்கள் குடும்ப சுகாதார உ த்தியோகத்தர் காரியாலயங்கள் ஆகியவற்றில் எலிக்காய்ச்சலுக்கான மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும இதுதவிர தனியார் மருந்தகங்களில் மிக குறைந்த விலையில் எலிக்காய்ச்சல் பரவாமல் இருப்பதற்கான மருந்துகளை பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவுரை வழங்கியுள்ளனர்.

## ஹம்பாந்தோட்டை நகரில் எரிபொருளுக்கு நீண்ட வரிசை

### பொருட்களின் விலைகளும் அதிகரிப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

5. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை கூமொவி தலைமை அலுவலகத்தின் 7ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2022-05-13ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் முகவரியில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவரது பிரதிநிதிகளின் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டு விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.
6. சகல விலைமனுக்களுடனும் 500,000.00 ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்,**
**த.பெ. இல. 27, வொக்ஷோல் வீதி,**
**பெறுகைப் பிரிவு,**
**கொழும்பு 02,**
**இலங்கை.**

**தொலைபேசி/ தொலைநகல்: +94 - 112-337549**

SATHOSA
COOPERATIVE WHOLESALE ESTABLISHMENT

### பெயர் மாற்றம்

கொழும்பு மாவட்டம் வட கொழும்பு பிரதேச சபை, கொட்டாஞ்சேனை மேற்கு கிராமசேவகர் பிரிவு இல. 224/1 பிகரின்ஸ் றோட், கொழும்பு 13ல் வசிக்கும் **கருப்பையா செல்வராஜு** ஆகிய நான் இதன் பிறகு எனது பெயரை **கருப்பையா செல்வராஜ்** என சகல ஆவணங்களிலும் உபயோகிப்பதாக இலங்கை சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

**இங்ஙனம்**
**K. செல்வராஜ்**

Repeat Your Ad For Better Offers

### அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

2022ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் கம்பஹா அளுத்கம, இலக்கம் 109இல் வசிக்கும் தே.அ.அ. இலக்கம் 1987 83701615 உடைய **சமரசுந்தர செனெவிரத்ன முஹந்திரம்கே மதுஷானி சாமரீ செனெவிரத்ன** ஆகிய நான்,

ஜாஎல, துடெல்ல, சிங்ஹசல வீதி இலக்கம் 618/பீ இல் வசிக்கும் தே.அ.அ. இல. 199128101646 உடைய **அகில எரந்த விமலசூரிய** என்பவருக்கு வழங்கப்பட்டதும்,

2020ஆம் ஆண்டு ஜூன் 06ஆம் திகதி கம்பஹா பிரசித்த நொத்தாரிசு திரு. **யூ.ஜீ.டி.ஆர். ரணதுங்க** என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 455 இலக்கமுடைய விஷேட அற்றோணி தத்துவமானது இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என்சார்பில் அவர் மேற்கொள்ளும் எந்தவித நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களிற்கு நான் பொறுப்பு தாரியல்ல எனவும் மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

**எஸ்.எஸ்.எம்.எம். சாமரீ செனெவிரத்ன**

## பெறுகை அறிவித்தல்

### எரிசக்தி அமைச்சு
### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**CPC வளவுகளிலுள்ள Split வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்வதற்காக விலைக்கோரல் (தலைமை அலுவலகம், பிளவர் வீதி, தேர்ஸ்டன் வீதி மற்றும் கொலன்னாவ விவசாய இரசாயன பிரிவு)**

**B/26/2022**

CPC வளவுகளிலுள்ள (தலைமை அலுவலகம், பிளவர் வீதி, தேர்ஸ்டன் வீதி மற்றும் கொலன்னாவ விவசாய இரசாயன பிரிவு) Split வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்யும் ஒப்பந்தத்திற்கு இதனையொத்த வேலைகளில் முன் அனுபவமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவை (ரூ. 925.93 + 8% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் 38,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-05-02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல: 609,**
**கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09,**
**தொலைபேசி: 011-5455331**
**தொலைநகல்: 011-5455424**

## பெறுகை அறிவித்தல்

### எரிசக்தி அமைச்சு
### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**மாத்தறை விடுமுறை விடுதி மற்றும் காலியில் அமைந்துள்ள CPC பிராந்திய அலுவலக வளவுகளிலுள்ள Split வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்வதற்காக விலைக்கோரல்**

**B/28/2022**

மாத்தறை விடுமுறை விடுதி மற்றும் காலியில் அமைந்துள்ள CPC பிராந்திய அலுவலக வளவுகளிலுள்ள Split வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்யும் ஒப்பந்தத்திற்கு இதனையொத்த வேலைகளில் முன் அனுபவமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவை (ரூ. 925.93 + 8% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீடின் மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் 21,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-05-02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09,**
**தொலைபேசி: 011-5455331**
**தொலைநகல்: 011-5455424**

# ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கு சொந்தமான வாகன தரிப்பிட இடத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுக்கோரல்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கு உட்பட்ட பின்வரும் அட்டவணையின்படி, குறிப்பிட்ட காலத்திற்கு வாகனத் தரிப்பிட இடங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனு கோரப்படுவதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

- ஒரு விண்ணப்பத்திற்கு **ரூ.10,000.00** திரும்பப்பெறக்கூடிய வைப்புத்தொகை மற்றும் மீளப்பெற முடியாத **ரூ.5000.00** செலுத்த வேண்டும்.
- விண்ணப்பங்கள் **2022.05.04** ஆம் திகதி **பி.ப.3.00** மணிவரை இந்த சபையின் **நிதி திணைக்களத்தில்** பெற்றுக்கொள்ள முடியும்.
- உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள், இந்த அலுவலகத்தினால் வழங்கப்படும் விலைமனுக்கோரலில் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும்.
- விலைமனுக்கோரல் **2022.05.05** ஆம் திகதி **பி.ப.2.00** மணி வரை கோரப்படுவதுடன், **பி.ப.2.00** மணிக்கு முன்னர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாக நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும்.
- மனுக்கள் சமர்ப்பிக்கும்போது பின்வரும் அனைத்து வாகன நிறுத்துமிடங்களுக்கும் (Package) விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மற்றும் ஒவ்வொரு வாகன நிறுத்துமிடத்திற்கும் தனித்தனியான விலைமனுக்கள் கோர முடியாது.

மனுக்கள் **2022.05.05 பி.ப.3.00** மணிக்கு திறக்கப்படும் மற்றும் மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுக்கள் கோரும் நிறுவனம் அல்லது அவரது பிரதிநிதிகள் பங்கேற்க முடியும். **(காசோலை மூலமான பணம் ஏற்றுக்கொள்ளப்படாது.)**

| | வாகன தரிப்பிடம் | குறைந்தபட்ச மாதாந்த கட்டணம் | காலம் |
|---|---|---|---|
| 01. | நுகேகொட சுப்பர் மார்க்கெட்டில் உள்ள பஸ் தரிப்பிடம் | ரூ. 700,000.00 | 06 மாதங்கள் |
| 02. | ஜனஜய வணிக வளாகத்திற்கு முன்னால் உள்ள பஸ் தரிப்பிடம் | ரூ. 50,000.00 | 2 வருடங்கள் |
| 03. | மாநகர சபைக்கு முன்னால் உள்ள பஸ் தரிப்பிடம் | ரூ. 50,000.00 | 2 வருடங்கள் |
| 04. | நுகேகொட பொது சந்தைக்கருகாமைளில் உள்ள பஸ் தரிப்பிடம் | ரூ. 60,000.00 | 2 வருடங்கள் |
| 05. | நுகேகொட புகையிரத மபவத்தையில் உள்ள பஸ் தரிப்பிடம் | ரூ. 40,000.00 | 2 வருடங்கள் |
| 06. | தெல்கந்த பொது வணிக வளாகத்தில் உள்ள பஸ் தரிப்பிடம் | ரூ. 25,000.00 | 2 வருடங்கள் |
| 07. | எத்துல் கோட்டே புத்த ஜெயந்தி கோபுரத்திற்கு அருகில் உள்ள பஸ் தரிப்பிடம் | ரூ. 40,000.00 | 2 வருடங்கள் |

நகராட்சித் தலைவர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை, இராஜகிரிய
2022.04.11
தொ.பே. 0112 874701 / 0112 888096

SriLankan Airlines
oneworld

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்,
பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை.
கொள்முதல் எண் அறிவிப்பு –

**ENG/ALC/RFP/22/005, ENG/ALC/RFP/22/006, ENG/ALC/RFP/22/007 & ENG/ALC/RFP/22/008**

**பொருத்தமான விமானங்களுக்கான உலர் குத்தகை (Dry Lease)**

SLA சார்பாக, ஏல மதிப்பீட்டுக் குழுவின் தலைவரால், குறித்த "BID ACKNOWLEDGEMENT FORM" இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, பொருத்தமான விமானங்களை உலர் குத்தகை அடிப்படையில் பெறுவதற்கு தகைமையுள்ள ஏலதாரர்களிடமிருந்து ஏலங்கள் கோரப்படுகின்றன,

இந்த ஏலமானது, சர்வதேச ஏலப்போட்டி (ICB) முறையில் நடாத்தப்படும். இதற்காக ஆர்வமுள்ள, தகைமையுமுள்ள விமானங்களை உலர் குத்தகையில் வைக்க சட்டபூர்வ உரிமையுடைய ஏலதாரர்கள் 2022 ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (**https://www.srilankan.com/en_uk/coporate/tender-notices**) குறிப்பிட்டவாறு, சரியாக பூர்த்தி செய்து கையொப்பமிட்ட "BID ACKNOWLEDGEMENT FORM" இனையும், குறைந்தபட்சம் ஒரு விமானத்தை 4-6 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துடன் உலர் குத்தகை முறையில் வைப்பதற்கு சட்டபூர்வ உரிமைகளை உறுதி செய்வதற்காக கீழே வரையறுக்கப்பட்டுள்ள "துணை ஆவணங்களையும்" இணைத்து **rillhan.hussain@srilankan.com** மற்றும் **sanjeewa.dissanayake@srilankan.com** ஆகிய மின்னஞ்சல் முகவரிகளுக்கு பிரதி செய்து, **umega.seneviratne@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் தொடர்பு கொள்ளலாம். ஆர்வமுள்ள, தகைமையுள்ள ஏலதாரர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருத்தமான விமானங்களுக்காக ஏலங்களை சமர்ப்பிக்க முடியும்.

பின்வருபவை "துணை ஆவணங்களாக" சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

- ஏலதாரரின் சுயவிவரம்.
- உரிமையாளரிடமிருந்து விமானத்திற்காக பெறப்பட்ட விற்பனை பில் அல்லது அதற்கு ஒப்பான உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம் அல்லது எதிர்கால விநியோகங்களுக்கான கொள்முதல் ஆணை அல்லது அதற்கு சமனான ஆவணம்.
- விமானத்தை உலர் குத்தகைக்கு விடுவதற்கான ஏலத்தை சமர்ப்பிப்பதற்காக ஏலதாரர் விமானத்தின் உரிமையாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட அனுமதி கடிதம் மற்றும் விதிமுறைகளுடன் SLA உடன் குத்தகை ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு விமானத்தின் உரிமையாளர் ஒப்புக்கொண்டுள்ளார் என்பதற்கான ஏலதாரரினால் சமர்ப்பிக்கப்படும் உத்தரவாதம்.
- விமானம் சம்பந்தமாக தற்போது இருக்கும் நிதி ஏற்பாடுகள்/அடமானம்/உரிமைகள் தொடர்பான எந்தத்தகவலும் (விமானம் குத்தகையின் கீழ் இருக்கின்றதா அல்லது இல்லையா என்ற தகவலும்)

ஆர்வமும், தகைமையுமுள்ள ஏலதாரர்கள், முறையாக பூர்த்தி செய்யப்பட்ட "ஏல ஒப்புதலுக்கான படிவம்" மற்றும் "துணை ஆவணங்களை" சமர்ப்பித்தவுடன் SLA இடமிருந்து "ஏல ஆவணங்களைப்" பெறலாம். ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கு "ஏல ஆவணங்கள்" தொடர்பான மேலதிக தகவல் அல்லது தெளிவுபடுத்தல், தேவைப்பட்டால், 2022 மே 09ஆம் திகதி அல்லது அதற்கு முன், **rillhan.hussain@srilankan.com** மற்றும் **sanjeewa.dissanayake@srilankan.com** ஆகிய மின்னஞ்சல் முகவரிகளுக்கு பிரதிசெய்து, **umega.seneviratne@srilankan.com** என்ற மின்னஞ்சலைத் தொடர்புகொண்டு தெரிந்து கொள்ளலாம்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து ஏல ஆவணங்களும் **asset@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2022 மே மாதம் 16ஆம் திகதி இலங்கை நேரப்படி 14 மணி (GMT + 0530) நேரத்திற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (ஏலங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு). வேறு அறிவித்தல் அல்லது ஏல ஆவணங்களில் ஏதேனும் வித்தியாசங்கள் செய்யாதவிடத்து, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் மின்னணு முறையில் 2022 மே மாதம் 16ஆம் திகதி (அதே தினம்) இலங்கை நேரப்படி 14 மணி (GMT + 0530) நேரத்திற்கு அனைத்து ஆவணங்களும் திறக்கப்படும்.

**ஏல மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்**
**ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்**

SRI LANKA

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## சுற்றுலாத்துறை அமைச்சு
### இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்

## விலை மனுக்கோரல்

**சமூக ஊடக சந்தைப்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு பணிக்காக முகவர் நிறுவனமொன்றினை நியமித்தல்**

**Bid No : SLTPB/PROC /2022/ NCB / 21**

01. SLTPB இன் திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் SLTPB சமூக ஊடக சந்தைப்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு பணிக்காக முகவர் நிறுவனமொன்றினை நியமிப்பதற்கு தகுதி வாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

02. மனுதாரர்கள் பின்வரும் தகுதிகளையும் அனுபவத்தையும் பெற்றிருக்க வேண்டும்.

    i) முகவர் நிறுவனம் / பங்குடமை நிறுவனங்கள் இலங்கையில் ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாக முறையாகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் மற்றும் இலங்கையின் கொழும்பில் செயல்பாட்டு அலுவலகத்தைக் கொண்டிருக்க வேண்டும். இருப்பினும், முன்னணி நிறுவனங்களின் (மனுதாரர்) இணைப்பு C பகுதியின் கீழ் தெளிவுத்திறன் கட்டளை விதிகள் அனைத்திற்கும் இணங்க வேண்டும்.

    தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிரச்சாரத்தை நிறைவேற்றுவதற்கான முழுப் பொறுப்பும் முன்னனி நிறுவனத்திக்கு உண்டு.

    i. முன்னணி நிறுவனமானது **2017 முதல் 2022** வரையிலான காலப்பகுதியினுள் சமூக ஊடக சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தபட்சம் கடந்த 5 வருடங்களில் தொடர்ச்சியான உள்ளார்ந்த அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    iii. குறித்த முன்னணி நிறுவனம் குறைந்தபட்சம் 3 சமூக ஊடக சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை விசேடமாக சர்வதேச தர அடையாளம், சந்தைப்படுத்தல் இலக்கு அல்லது சுற்றுலா தொடர்பான தயாரிப்புக்காக குறைந்தபட்சம் ஒரு பிரச்சாரத்திற்கு **ரூ.1,000,000/-** மதிப்பில் நடத்தியிருக்க வேண்டும். (நிறுவனம் தொடர்புடைய அனைத்து ஆவண ஆதாரங்களையும் வழங்க வேண்டும்).

03. தேசிய கொள்முதல் வழிகாட்டி 2006 ன் கீழ் தேசிய போட்டி ஏல முறையை பின்பற்றி ஏலம் நடாத்தப்படும்.
**https://www.treasury.gov.lk/web/procurement-guidelines-and-manuals/section/procurement%20guidelines**

04. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **procurement@srilanka.travel** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை ஒன்றினை அனுப்பி மற்றும் அதன் பிரதியை **sandamali@srilanka.travel** என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

05. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மனு ஆவணங்களை **www.Srilanka.travel** எனும் இணையத்தளதினூடாக எவ்வித கட்டணமுமின்றி இலவசமாக பரிசீலனை செய்துக்கொள்ளலாம்.

06. எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2022.05.04 ஆம் திகதிக்கு** முன்னர் மீளச்செலுத்தப்படாத **ரூ.4,000/= (நாளாயிரம்) கட்டணத்தைத் இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை 007119985 எனும் கணக்கிலக்கத்தில்** இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் பெயரில் வைப்பிலிட்ட இரசீதின் அசல் பிரதியுடன் மனு ஆவணத்தை **sandamali@srilanka.travel** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
    - மனுதாரரின் பெயர்
    - தொடர்பு கொள்ளவேண்டிய நபர் மற்றும் விபரங்கள்
    - மின்னஞ்சல் முகவரி

07. காலதாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும்.

08. இது தொடர்பான முன் மனுக்கூட்டம் **2022.04.19 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு நடைபெறும். ஆர்வமுள்ள மனுதாரர்கள் **<https://meet.google.com/erb-bbsu-dfp?authuser=0>** நிகழ்நிலை மூலமாக இணைந்து கொள்ள அழைக்கப்படுகின்றார்கள்.

09. **2022.05.05 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னதாக கொள்முதல் பிரிவு (கீழ்மாடி), இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இல.80, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரிக்கு கிடைக்குமாறு அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இட வேண்டும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

10. மனு ஆவணங்களை மாற்ற முடியாது.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்
இல-80, காலி வீதி,
கொழும்பு 03.

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB III)

## வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மனிப்பாய் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் செயல்திறன் பகுதி பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தில் முதல் மாடிக் கட்டிடத்தின் நிர்மாணம்

**LDSP/NP/JAF/VSWPS/PT/2021/01**

(01) உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தில் முதல் மாடிக் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தில் கீழுள்ள கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(02) கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணப் பணிக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து வட மாகாண, யாழ்ப்பாண, மனிப்பாய், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் சார்பில் உள்ளூர் நிர்வாகப் பெறுகைக்குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

(03) தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

(04) ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மனிப்பாய், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, தலைவரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. இல.: 021-2256651/ 021-2255381, தொலைநகல் 021-2256643, மின்னஞ்சல் - vswps@yahoo.com) என்பதோடு 2022 ஏப்ரல் 11ஆம் திகதி தொடக்கம் 2022 மே 09 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் இதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

(05) விலைமனு ஆவணத்தின் பிரிவு 4இல் தகைமை தேவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 5இல் வழங்கப்பட்டுள்ளது.

(06) ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் நிதி அமைச்சு அல்லது உலக வங்கி அல்லது ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு உள்நாட்டு ஒப்பந்ததாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக கட்டிட நிர்மாணத் துறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(07) மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவை செலுத்தி 2022 ஏப்ரல் 11ஆம் திகதி தொடக்கம் 2022 மே 09ஆம் திகதி வரை வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை மனிப்பாய், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்த வேண்டும்.

(08) விலைமனுக்களை 2022 மே 10 ஆம் திகதி 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு அசல் மற்றும் நகலில் சமர்ப்பிப்பது அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள், விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் கீழுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனுபிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

(09) விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி 11:00 மணிக்கு மனிப்பாய், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையில் இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்கலாம்.

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | மதிப்பிடப் பட்ட சிவில் செலவு ரூபா (மில்லியன்) | ஒப்பந்தக் காலம் | தேவை யான தரம் | விலைமனு சமர்ப்பிப் பதற்கான இறுதித் திகதியில் இருந்து விலைமனு செல்லுபடிக் காலம் | விலைமனு பிணை தேவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் |
| 01 | LDSP/ NP/ JAF/ VSWPS/ PT/2021/ 01 | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தில் முதல் மாடிக் கட்டிடத்தின் நிர்மாணம் | 11.6 | 98 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் (கட்டிடம்) | 77 நாட்கள் | 116,000.00 | 2022.08.23 |

**தலைவர்,**
**உள்ளூர் நிர்வாக பெறுகைக்குழு**
**வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை**
**மனிப்பாய், யாழ்ப்பாணம்,**
**வட மாகாணம்.**
**2022.04.11**

Daily News Classifieds, the Housewives' companion

The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
for 15 Words - Rs. 800/-
For each additional word Rs. 25/-
Easy way to make your payment :- BOC - Acc.No. 000000377 LAKE HOUSE BRANCH
Green Light for Online Transfer
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

# விலைமனுக்கோரல் கால எல்லையை நீடித்தல்

எண் - 54

அரசாங்க அச்சுத் திணைக்களம்

## அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக கேள்வி கோரல்

கொழும்பு - 08, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த, இல.118 இல், அமைந்துள்ள அரசாங்க அச்சகத் திணைக்கள வளாகத்தில் உத்தேச இடங்களில் குறித்த சுத்திகரிப்புச் சேவைகளை நடத்திச் செல்வதுடன் சம்பந்தப்பட்ட 2022.03.29 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலுடன் சம்பந்தப்பட்டது.

| File No | Description | Previous Opening Date | New Opening Date |
|---|---|---|---|
| DGP/05/04/ Clean.S/ 2022-2023 | அரசாங்க அச்சகத் திணைக்கள வளாகத்தில் உத்தேச இடங்களில் குறித்த சுத்திகரிப்பு சேவைகளை நடத்திச் செல்லல் | 2022.04.12 | 2022.04.19 |

மேற்படி பெறுகையுடன் குறித்த விலைமனுக்கள் திறக்கப்படும் தினம் 2022.04.12 ஆம் திகதி அரசாங்க விடுமுறை தினமாக பிரகடனப்படுத்திய காரணத்தால் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகிறது.

**கங்கானி லியனகே**
**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு**
**அரசாங்க அச்சக திணைக்களம்**
**இல.118,**
**டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த,**
**கொழும்பு - 08**

**தொ.பே-0112673311/பெக்ஸ் - 0112698653**
**இணையத்தளம் : www.documents.gov.lk**
**மின்னஞ்சல் : othersupplydgp@gmail.com**

### பெயர் மாற்றம்

கொழும்பு மாவட்டம் வட கொழும்பு பிரதேச சபை கொட்டாஞ்சேனை மேற்கு கிராமசேவகர் பிரிவில் 224/1 பிகரின்ஸ்டே றாட், கொழும்பு 13ல் வசிக்கும் அ.அ.இல. 727361049V உடைய **சங்கரன் ஜெதீந்திரதாஸ் மஞ்சுளா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **எழுத்துபுரக்கல் யெதீந்திரதாஸ் மஞ்சுளா** என உபயோகிப்பதாக இலங்கை சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

**இங்ஙனம்**
**ஈ.வை. மஞ்சுளா**

### பொது அறிவிப்பு

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1)இல் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமைக் கம்பனியை கூட்டிணைத்தல் தொடர்பான பொது அறிவித்தல்
கம்பனியின் பெயர்:
**ஜெசிட் அலுமினியம் (வரையறுக்கப்பட்ட) தனியார் நிறுவனம்**
கம்பனி இலக்கம்:
**பீ.வீ. 00255777**
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
01 சித்திரை 2022
பதிவு செய்யப்பட்ட காரியாலய/ அலுவலக முகவரி:
**30/1A,**
**பஹலகரகஹாமுன, கடவத்த**
**எச்.எம்.ஈ.டி.எச். கும்புறுலந்த Attorney-at-Law நிறுவன செயலாளர்**
**ஜெசிட் அலுமினியம் (வரையறுக்கப்பட்ட) தனியார் நிறுவனம்**

**Repeat Your ad For Better Offers**

# கேள்விகளுக்கான அழைப்பு

## விவசாயத் திணைக்களம்
## பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம், நுவரெலியா

விவசாயத் திணைக்களத்தின் நுவரெலியா பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் பின்வரும் வேலைகளுக்காக உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | E | F | | |
|---|---|---|---|---|---|---|---|
| தொ. இல. | வேலை விபரங்கள் | விபரக் குறிப்பு | அளவு | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாக வேண்டிய காலம் | | |
| | | | | | ரொக்கப் பணமாக | வங்கிப் பிணை முறியாக | பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் |
| 01 | நுவரெலியா வலயத்தின் பண்ணைகளுக்கு பிளாஸ்டிக் Crates கொள்வனவு செய்தல் | • குவிக்கக் கூடியதாக (Stacable) இருத்தல் வேண்டும். • நீளம்- 565 mm • அகலம் -390mm • உயரம் -300 mm (மஞ்சள் நிறம் தவிர்ந்த) | 2200 | நுஎ /பிவிப/கே/ NCB/2022/07 | 17,600.00 | 35,200.00 | 2022-08-02 |

இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேற்படி விடயத்தின் பொருட்டும் பெற்றுக்கொண்ட கேள்விப் படிவங்களைப் பயன்படுத்தி விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் நுவரெலியா பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் பிரதான முகாமைத்துவ சேவை அதிகாரிக்கு மீளளிக்கப்படாத 1500.00 ரூபா கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 2022-04-11ஆம் திகதி முதல் 2022-05-02ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இயைபுடைய கேள்விதாரர்கள் 1987ஆம் ஆண்டில் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்தப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ''தலைவர், பிரதேச பெறுகைக்குழு, பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம், சந்ததென்ன வீதி, நுவரெலியா'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

சகல வழங்குநர்களும் மேற்படி அட்டவணையின் F நிரலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பிணைப் பணத்தை வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் வங்கிப் பிணை முறியின் ஊடாக பிணையை வைப்புச் செய்வதானால் அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2022-05-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் உடன் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம்,**
**சந்ததென்ன வீதி,**
**நுவரெலியா.**
**052-2222611**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை - மேல் மாகாணம்

### 'சுரகிமு கங்கா' திட்டத்தின் கீழ் கரடியனாறு திண்ம கழிவு முகாமைத்துவ செயற்றிட்டத்திற்காக உத்தேசிக்கப்பட்ட லீசேட் சுத்திகரிப்பு பொறித்தொகுதியை வடிவமைத்தல், நிர்மாணம் மற்றும் பூர்த்தி செய்தல்

'சுரகிமு கங்கா' திட்டத்தின் கீழ் கரடியனாற்றில் திண்ம கழிவு முகாமைத்துவ செயற்றிட்டத்திற்காக உத்தேசிக்கப்பட்ட லீசேட் சுத்திகரிப்பு பொறித்தொகுதிக்கான அபிவிருத்திக்கு தேவையான லீசட் **(Leachate) சுத்திகரிப்பு பொறித்தொகுதியின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்காக** தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையின் தலைவர் அழைக்கின்றார்.

***The works consist of construction of the Leachate Treatment Plant using anaerobic treatment followed by aerobic treatment comprising biological treatment followed by appropriate tertiary treatment to meet effluent discharge limits, which includes Construction of Inlet channel and screening Chamber, Equalization tank and chemical dosing system Anaerobic tank, Aeration Tank, Settling Tank, Sludge recirculation system, Sludge dewatering system, Tertiary system if deemed necessary, Electromechanical installation Blowers/pumps/panel boards/supervisory control system, Dosing equipment and disinfection chamber etc.***

நிர்மாணக் காலமானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 180 நாட்காட்டி நாட்களாகும்.

1) விலைமனுக்கோரலானது தனிக்கட்ட இரு-உறைகள் முறைமை தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
2) தகுதியுள்ள விலைமனுதாரர்கள் (தனிநபர், கம்பனி அல்லது கூட்டுமுயற்சி) பின்வரும் ஆரம்ப தகைமை தேவைப்பாடுகளுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.
   அ) விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.
   ஆ) CIDA பதிவில் மின்னியல் மற்றும் பொறியியல் சேவைகளுக்காக ஈஎம்-3 தரத்தில் மற்றும் கட்டிட நிர்மாணம் மற்றும் கழிவுநீர் மற்றும் நீர் வழங்கலில் சி-4 அல்லது மேற்பட்ட தரத்திலிருத்தல் வேண்டும். (விலைமனுதாரருக்கு வடிவமைப்பு மற்றும் செயற்றிட்டங்களை கட்டுவதில் சொந்தமான அனுபவம் இல்லாவிடின், ஒப்பந்தத்தின் வடிவமைப்பு பகுதிக்காக பொறியியல் உசாத்துணையாளர்கள் / நிறுவனங்களுடன் பங்குடமை அல்லது கூட்டுமுயற்சியில் சேரலாம்.
   இ) இலங்கையில் உசாத்துணை நிறுவனமாக/ கம்பனியாக வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஈ) விலைமனுதாரரானவர் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் கீழ் பதிவு பெற்றவராகவும் பதிவுச் சான்றிதழானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3) தகுதியுள்ள விலைமனுதாரர்கள் (தனிநபர், நிறுவனம் அல்லது கூட்டுமுயற்சி) பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாண மாகாண சபை அலுவலக வளாகத்திலுள்ள மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபை பணிப்பாளரிடமுள்ள விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப்பின் தேவைப்படுத்தல்களுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.
4) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாண மாகாண சபை அலுவலக வளாகத்திலுள்ள மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபை பணிப்பாளரிடமிருந்து 011-2092996 என்ற தொலைபேசியூடாக, wmawp.gov@gmail.com என்ற மின்னஞ்சலூடாக பெற்று பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாண மாகாண சபை அலுவலக வளாகத்திலுள்ள மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபை பணிப்பாளரின் அலுவலகத்தில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5) 2022.04.11 ஆம் திகதியிலிருந்து 2022.05.05 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் 5,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாண மாகாண சபை அலுவலக வளாகத்திலுள்ள மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபை பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு ரொக்கப் பணத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.
6) விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7) விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகளின் I ஆம் பிரிவிற்கு இணங்கும் தன்மையில் விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகளின் 16.2 ஆம் உட்கூற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு முகவராண்மைகளின் ஒன்றால் வழங்கப்பட்டதும் இருபது இலட்சம் இலங்கை ரூபா தொகைக்கான (2,000,000 இ.ரூபா) விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8) 2022.05.06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாண மாகாண சபை அலுவலக வளாகத்திலுள்ள மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபை பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். [பொது தகவலுடனான 'தொழில்நுட்ப முன்மொழிவு' (தபாலுறை-1) மற்றும் 'விலை முன்மொழிவு' (தபாலுறை-2) ஆகியன இரு தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். (I ஆம் தபாலுறையின் விலைமனுக்கள், விலைமனுக்களை மூடிய பின்னர் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்]
9) பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாண மாகாண சபை அலுவலக வளாகத்திலுள்ள மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபை பணிப்பாளரின் அலுவலகத்தில் 2022 ஏப்ரல் 27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மேல் மாகாணம்),**
**மேல் மாகாண மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதி,**
**இல.: 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி இல. : 011-2092996, 93**
**தொலைநகல் இல. : 011-2092998**
11.04.2022.

## நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை
## லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட்
## முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் (RFP)

### ஏழு நஅஅ (UDA) வாடிவீடுகளை மீளபிவிருத்தி செய்வதற்கு வளமுள்ள முதலீட்டாளர் / அபிவிருத்தியாளரைத் தெரிவு செய்தல்

பின்வரும் வாடி வீடுகளை 10 வருட காலத்திற்கு வடிவமைத்தல், நிர்மாணித்தல், நிதியிடல், இயக்குதல் மற்றும் இடமாற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த முதலீட்டாளர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட முன்மொழிவுகளை லங்கா ரெஸ்ட் ஹவுஸ் தலைவரின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | வாடிவீட்டின் பெயர் | வாடி வீட்டு ஆதனத்திற்கான அடிப்படை மாதாந்த கட்டணம் (ரூபா) | மாதாந்த ஏனைய கட்டணம் (ரூபா) | பிணை முறித் தொகை (ரூபா) | பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | மாத்தறை வாடி வீடு | 145,000.00 | 100,000.00 | 441,000.00 | 2022 நவம்பர் 02ஆம் திகதி வரை |
| 02 | குருநாகல் வாடி வீடு | 260,000.00 | 40,000.00 | 540,000.00 | |
| 03 | சிலாபம் வாடி வீடு | 245,000.00 | 40,000.00 | 513,000.00 | |
| 04 | வவுனியா வாடி வீடு | 120,000.00 | 80,378.00 | 360,680.00 | |
| 05 | குளியாபிட்டிய வாடி வீடு | 110,000.00 | 50,000.00 | 288,000.00 | |
| 06 | பண்டாரவளை வாடி வீடு | 175,000.00 | 55,000.00 | 729,000.00 | |
| 07 | கடுகண்ணாவ வாடி வீடு | 15,000.00 | 135,000.00 | 270,000.00 | |

1. கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்டுள்ள நிறுவனங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு தகுதியைப் பெறும்.
2. தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான முதலீட்டாளர்கள் அபகீர்த்தியாளர் பட்டிலுக்கு உட்படாதவர்களாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் (RFP) ஆவணத்தில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, செத்சிறிபாய, 1ஆம் படிநிலை, தரை தளம், லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட், செயற்பாட்டு முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் வாரத்தின் வேலை நாட்களில் செயற்பாட்டு முகாமையாளர் அலுவலகத்தில் முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் (RFP) ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களுக்கு 0112883306 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
4. பத்தரமுல்ல, செத்சிறிபாய, 1ஆம் படிநிலை, தரை தளம், லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் கணக்காளருக்கு 25,000.00 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்தியும் 2022 ஏப்ரல் 18ஆம் திகதி முதல் 2022 மே 04ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பத்தரமுல்ல, செத்சிறிபாய, 1ஆம் படிநிலை, தரை தளம், லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் எந்தவொரு வளமுள்ள முதலீட்டாளர் அல்லது அவரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஆங்கில மொழியிலான முழுமையான முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் (RFP) ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.
5. இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டதும் மற்றும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மற்றும் விலைக்கோரல் ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரக் குறிப்புகளின் பிரகாரம் வங்கி உத்தரவாத வடிவத்தில் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வகையில் இருத்தல் வேண்டும் மற்றும் பத்தரமுல்ல, செத்சிறிபாய, 1ஆம் படிநிலை, தரை தளம், லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் தலைவருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
6. முன்மொழிவுகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக தலைவர், லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட், செத்சிறிபாய, 1ஆம் படிநிலை, தரை தளம், பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2022 மே 06ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் முன்மொழிவுகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022 ஏப்ரல் 25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்ல, செத்சிறிபாய, 1ஆம் படிநிலை, 9ஆம் தளம், நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
8. எந்தவொரு முன்மொழிவையும் தயாரித்தல் தொடர்பான எவ்விதமான செலவுகளுக்கும் LRHL பொறுப்பு கூறாது. கிடைக்கப்பெற்றுள்ள முன்மொழிவுகளுக்கிடையில் பொருத்தமான எந்தவொரு முன்மொழிவை ஏற்றுக்கொள்ளும் அல்லது சகல முன்மொழிவுகளை நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட்,**
**தரை தளம், படிநிலை 1, செத்சிறிபாய, பத்தரமுல்ல.**



## 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்

# இலங்கை சாதனையை முறியடித்த சச்சினி, நிலானி, கயந்திகா

தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்ற 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது சனிக்கிழமை (09) மூன்று இலங்கை சாதனைகளும், ஒரு போட்டிச் சாதனையும், இரண்டு கனிஷ்ட தேசிய சாதனைகளும் முறியடிக்கப்பட்டன.

பெண்களுக்கான மத்திய தூர ஓட்டப் போட்டிகளில் தேசிய சம்பியனாக வலம்வருகின்ற கயந்திகா அபேரட்ன, பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியை 02 நிமிடங்களும் 01.44 செக்கன்களில் நிறைவுசெய்து இலங்கை சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

இதன் மூலம் இந்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழா மற்றும் ஆசிய விளையாட்டு விழாவுக்கான அடைவுமட்டத்தினை அவர் பூர்த்தி செய்தார்.

முன்னதாக கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற அவர், இந்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழா மற்றும் ஆசிய விளையாட்டு விழாவுக்கான அடைவுமட்டத்தினைப் பூர்த்தி செய்தார்.

பெண்களுக்கான 1500 மீற்றர் மற்றும் 800 மீற்றர் ஆகிய போட்டி நிகழ்ச்சிகளில் இலங்கை சாதனைகளை முறியடித்தவராக கயந்திகா அபேரட்ன வலம்வருகின்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.



குறித்த போட்டியில் பங்குகொண்ட கனிஷ்ட வீராங்கனையான தருஷி கருணாரத்ன, போட்டியை 02 நிமிடங்கள் 04.40 செக்கன்களில் நிறைவுசெய்து டில்ஷி குமாரசிங்கவின் கனிஷ்ட தேசிய சாதனையை முறியடித்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

பெண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட நிலானி ரத்னாயக்க, இலங்கை சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்று அசத்தினார்.

போட்டியை 9 நிமிடங்கள் 40.24 செக்கன்களில் நிறைவுசெய்த அவர், தனது சொந்த இலங்கை சாதனையை முறியடித்தார். அத்துடன், இந்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழா மற்றும் ஆசிய விளையாட்டு விழாவுக்கான அடைவுமட்டத்தினையும் அவர் பூர்த்தி செய்தார்.

பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 3.71 மீற்றர் உயரத்தைத் தாவி தனது சொந்த சாதனையை 6ஆவது முறையாக சச்சினி பெரேரா முறியடித்தார்.

முன்னதாக கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவுக்கான முதலாவது தகுதிகாண் போட்டியில் 3.65 மீற்றர் உயரத்தையும், கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவுக்கான இரண்டாவது தகுதிகாண் போட்டியில் 3.70 மீற்றர் உயரத்தையும் தாவி அவர் அடுத்தடுத்து இலங்கை சாதனைகளை முறியடித்திருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

பெண்களுக்கான நீளம் பாய்தலில் தேசிய சம்பியனான சாரங்கி சில்வா, 6.52 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய போட்டி சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் பங்குகொண்டு வெள்ளிப் பதக்கம் வென்ற அமேஷா ஹெட்டியாரச்சி, தன்னுடைய சொந்த கனிஷ்ட தேசிய சாதனையை புதுப்பித்தார். போட்டியை அவர் ஒரு நிமிடமும் 00.22 செக்கன்களில் நிறைவுசெய்தார்.

தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பின் 2ஆவது நாளில் 15 போட்டி நிகழ்ச்சிகளுக்கான இறுதிப் போட்டிகள் நடைபெற்றன. இதில், ஆண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் யு.பி ஹேரத், ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் மொஹமட் சபான், ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் ருசிரு சதுரங்க, ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் தனுக தர்ஷன மற்றும் ஆண்களுக்கான 110 மீற்றர் சதடைதாண்டல் ஓட்டப் போட்டியில் ரொஷாளன் தம்மிக, ஆண்களுக்கான தட்டெறிதலில் டி. சப்பரமாது மற்றும் ஆண்களுக்கான நீளம் பாய்தலில் பிரசாத் விமலசிறி ஆகியோர் தங்கப் பதக்கங்களை சுவீகரித்தனர்.

பெண்களுக்கான 200 மீற்றரில் மேதானி ஜயமான்ன, பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் கௌஷல்யா மதுஷானி, பெண்களுக்கான நீளம் பாய்தலில் சாரங்கி சில்வா, பெண்களுக்கான தட்டெறிதலில் பி. பெரேரா மற்றும் பெண்களுக்கான 100 மீற்றர் சட்டவேலி ஓட்டப் போட்டியில் லக்ஷிகா சுகந்தி ஆகியோர் தங்கப் பதக்கங்களை வென்றனர்.

SINCE 1979
44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :
வாக்களித்தவர் பெயர் :
முகவரி :
மொபைல் இல. :

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 16-04-2022 இல. 03

STREAM LIKE A BOSS!
SLTMOBITEL
இலங்கையின்
முதன்மையான,
அதிவேகமான
மற்றும் விஸ்தரிக்கப்பட்ட
PREMIUM FIBRE வலையமைப்பு.
FIBRE

# அக்கரைப்பற்று ஜொலிபோய்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன்

**அக்கரைப்பற்று வடக்கு நிருபர்**



ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று ஜொலிபோய்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் தலைமையின் கீழ் விளையாட்டு உத்தியோகத்தர் அ.ரிசாந்தனின் வழிநடத்தலில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்ற போட்டிகளின் இறுதி போட்டியிலேயே ஜொலிபோய்ஸ் விளையாட்டுக்கழகம் எவ்வித விக்கெட் இழப்பின்றி சம்பியனாகியது.

ஜொலிபோய்ஸ் மற்றும் அக்னி விளையாட்டுக்கழகங்கள் மோதிய இந்த இறுதிப்போட்டியில் அக்னி கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 8 ஓவர்கள் நிறைவில் 32 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழகம் மூன்று ஓவர்கள் நிறைவில் எவ்வித விக்கட் இழப்பின்றி வெற்றி இலக்கையடைந்ததுடன் அக்னி விளையாட்டு கழகம் இரண்டாவது இடத்தை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக கிறிஸ் சில்வர்வூட்



இலங்கை ஆடவர் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக இங்கிலாந்தினைச் சேர்ந்த கிறிஸ் சில்வர்வூட் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையில் கிறிஸ் சில்வர்வூடின் நியமனம் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

இங்கிலாந்து ஆடவர் கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளரான கிறிஸ் சில்வர்வூட், இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதன்படி கிறிஸ் சில்வர்வூட் இங்கிலாந்து அணிக்காக 6 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 7 ஒருநாள் போட்டிகளில் ஆடியிருக்கின்றார். அத்துடன் அவர் நீண்டகாலம் யோக்சைர் மற்றும் மிடில்செக்ஸ் அணிகளுக்காக கவுண்டி போட்டிகளில் ஆடிய அனுபவத்தினைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட் போட்டிகளைத் தொடர்ந்து ஜிம்பாப்வே உள்ளூர் அணியொன்றுக்கு பயிற்சியாளராக தனது கிரிக்கெட் பயிற்றுவிப்பு வாழ்க்கையினைத் தொடர்ந்த கிறிஸ் சில்வர்வூட், இங்கிலாந்தின் உள்ளூர் கழகமான எசெக்ஸ் அணியினை 2017ஆம் ஆண்டு 25 வருடங்களின் பின்னர் கவுண்டி சம்பியன்ஷிப் வெற்றியாளர்களாக மாற தனது பங்களிப்பினை வழங்கியிருந்தார்.

அத்துடன் இங்கிலாந்து கிரிக்கெட் அணியினை நீண்டகாலம் ஒருநாள் மற்றும் ரி 20 போட்டிகளில் முதல்தர அணியாக நீடிப்பதற்கும் தனது பங்களிப்பினை வழங்கியிருந்த கிறிஸ் சில்வர்வூட், இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக செயற்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மறுமுனையில் கிறிஸ் சில்வர்வூடின் ஆளுகைக்குள் வந்ததன் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணி, முதலாவதாக விளையாடவுள்ள தொடராக பங்களாதேஷ் அணியுடனான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அமைகின்றது.

இந்த டெஸ்ட் தொடரானது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பிற்காக மே மாத நடுப்பகுதியில் பங்களாதேஷில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளத்தில் பாரம்பரிய விளையாட்டு போட்டிகள்



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் ரிக்லா விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த மாட்டு வண்டில் போட்டிகளின் இறுதிப்போட்டி வெள்ளிக்கிழமை மாலை (01) புத்தளம் இஜ்திமா மைதானத்தில் இடம்பெற்றது.

புத்தளத்தில் பாரம்பரியமாக இந்த விளையாட்டுப் போட்டிகள் நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருகின்றன.

மாட்டு வண்டிகளின் உரிமையாளர்கள் மற்றும் இதர வாலிபர்களை உள்ளடக்கிய ரிக்லா என்கின்ற இந்த விளையாட்டு கழகத்தினர், ரசிகர்களுடைய எதிர்பார்ப்பை தீர்த்து வைக்கும் நோக்கத்தில் இந்த போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

தொடர்ந்து ஒரு மாத காலமாக தெரிவு போட்டிகள் நடைபெற்று இறுதிப்போட்டிள் வெள்ளியன்று நடைபெற்று முடிந்தன.

அரை கரத்தை, ரேஸ் கரத்தை மற்றும் திறந்த போட்டிகள் என்பன செவ்வனே நடந்தேறின. போட்டிக்கு பிரதம நடுவராக எம்.யூ.எம்.வஸீம் கடமையாற்றினார்.

அரை கரத்தை போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே ஏ.ஆர்.எம்.இஸ்கார், ஏ.எப்.எம்.ரியாஸ், ஏ.டபில்யூ.ஏ. வாரிஸ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

ரேஸ் கரத்தை போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே ஏ.டபில்யூ.ஏ.வாரிஸ், எம்.யூ.எம்.இஸ்மி, ஏ.ஆர்.எம். இஸ்கார் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

திறந்த போட்டியில் முதலாம் இடத்தினை எம்.யூ.எம்.இஸ்மியும், இரண்டாம் இடத்தினை ஏ.ஆர்.எம்.இஸ்காரும், மூன்றாம் இடத்தினை திரு.அமித்தும் பெற்றுக்கொண்டனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்களும், வெற்றிக்கிண்ணங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் விஷேட அதிதிகளாக புத்தளம் நகரசபை உறுப்பினர்கள் ரனீஸ் பதுர்தீன், பர்வீன் ராஜா மற்றும் ஆரிப் சிஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 11ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.